பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 06 திங்கட்கிழமை 23.10.2023 கதிர் 346

# விகிதாசார தேர்தல் முறையை நீக்க இடமளிக்க மாட்டோம்

## மனோ கணேசன் யாழ்ப்பாணத்தில் தெரிவிப்பு



விகிதாசார தேர்தல் முறைமையை நீக்கு வதற்கு இடமளிக்கப் போவதில்லை என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரு மான மனோ கணேசன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள அவர் செய்தியாளர்கள் சந்திப்பின்போது இத னைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதித் தேர்தல் அடுத்தவருடம் நடைபெறும் என்று ஜனாதிபதி ரணில் விக்கி ரமசிங்க அறிவிக்க வேண்டியதில்லை. அடுத் தவரும் அவருடைய பதவிக்காலம் நிறைவுக்கு வருவதால் ஜனாதிபதி தேர்தல் நடந்தாக வேண்டும் என்பது கட்டாயமானதாகும். தேர் தல் பற்றிய அறிவிப்பை ஜனாதிபதி விடுக்க வேண்டியதில்லை. அதனை தேர்தல்கள் ஆணைக் குழுவே மேற்கொள்ள வேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தல் முறைமை சம்பந்தமான அனைத்து அம்சங்க ளையும் ஆராய வேண்டும் என்று குறிப்பிட்டு ஒன்பது பேர் கொண்ட குழுவொன்றை இரகசிய மாக அமைத்து வர்த்தமானி அறிவித்தலையும் வெளியிட்டுள்ளார்.

இதேநேரம், நாடாளுமன்றத்தில் பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் ஏற்கனவே தேர்தல் முறைமை சம்பந்தமாக அமைக்கப்பட்ட குழுவானது கூடியிருந்தது. அப்போது, ஜனாதி பதி குழுவொன்றை அமைத்துள்ள நிலையில் மீண்டும் உங்கள் (பிரதமர்) தலைமையில் ஏன் குழுவைக் கூட்டகின்றீர்கள் என்று நான் கேள்வி எழுப்பினேன்.

☞ 2

## இது ரகசியம் அல்ல!



இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியைச் சந்திப்பதற்கு நேரம் ஒதுக்கித் தருமாறு கேட்டு தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் அவருக்கு ஒரு கடிதம் அனுப்புவதற்கான விவகாரம் பிள்ளை யார் கலியாணம் போன்று இழுத்துக்கொண்டே செல்கிறது. அந்தக் கடிதத்தில் தலைவர்கள் கையெழுத்திடுவது நாளைக்கு நாளைக்கு என்று ஒத்தி வைக்கப்பட்டு, கடைசியாக நேற்று ஞாயிற்றுக்கிழமை எல்லோரும் கையெழுத்து வைப்பார்கள் என்று வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினரான க.வி.விக்னேஸ்வரன் நம்பிக்கை தெரிவித்தார்.

"தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு உட்பட அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சி னைகள் தொடர்பில் இந்தியப் பிரதமர் நரேந் திர மோடியை தமிழ் கட்சிகளின் தலைவர்கள் கூட்டாக சந்தித்து விடயங்களை தெளிவுபடுத்த வதற்கான நேர ஒதுக்கீட்டைக் கோருவதற்கு இணக்கப்பாடுகள் எட்டப்பட்ட நிலையில் அதற் கான உத்தியோக பூர்வமான கடிதத்தின் வரைவு இறுதியாகியுள்ளது.

அதேபோன்று, முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியாக கடமையாற்றி

☞ 2

# இரவில் மழை பெய்ய வாய்ப்பு

நாட்டின்பலபகுதிகளில்இரவுவேளையில்பலத்த மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

அத்துடன், மத்திய, சப்ரகமுவ, ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களில் 100 மில்லிமீற்றருக்கும் அதிக மழைவீழ்ச்சி பதிவாகுமெனவும் குறிப்பிடப்பட் டுள்ளது.

இதுதொடர்பில் வளிமண்டவியல் திணைக்க ளம் விடுத்துள்ள அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

பலத்த மழை பெய்யும்

☞ 2

# தேர்தல் கட்டுப்பணம் அதிகரிக்கப்படுகின்றது

அனைத்து தேர்தல்களிலும் களமிறங்கும் வேட்பாளர்களின் கட்டுப்பணத்தை அதிகரிப்பதற்கு தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பில் தேசிய தேர் தல்கள் ஆணைக்குழுவின் தலை வர் எல்.எம்.ஏ.ஆர்.ரத்நாயக்க தெரி வித்துள்ளதாவது,

தேர்தல்களில் அதிகளவான வேட்பாளர்கள் களமிறங்குவதைத் தடுப்பதற்காகவே ஆணைக்குழு வேட்பாளர்களுக்கான கட்டணங் களை அதிகரிப்பதற்கு தீர்மானித் துள்ளது.

இதன் மூலமாக தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கும் தேர்தல் செலவீனங்களைகுறைப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளன. ஆகவே இந்த யோசனையை நாம் சட்டமா அதிபர் திணைக்களம் மற் றும் நாடாளுமன்றத்தின் அங்கீ காரத்துக்காக அனுப்பி வைத்துள் ளோம்.

அவர்களின் முடிவுகளின் பிரகாரம் அடுத்தகட்ட நடவடிக் கைகளைமுன்னெடுக்கவுள்ளோம் என்றார்.

# இந்தியாவுக்கான கடல் போக்குவரத்து அடுத்து தலைமன்னாரில் தொடங்கும்





## ரணில் நேற்றுத் தெரிவிப்பு

இந்தியாவிற்கும் மன்னாருக்கும் இடையில் கடல் போக்குவரத்து சேவையை ஏற்படுத்துவதற்கான ஏற்பாடுகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வருகின் றன. காங்கேசன்துறையில் ஆரம்பித்தோம். அடுத்து தலைமன்னாரில் ஆரம்பிக்கப்படும். அதேநேரம் இந்தியாவும் இலங்கையும் இணைந்த மின்சாரக் கட்டமைப்பை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளன. அது இந்த மன்னார் ஊடாகவும் இடம்பெறுகின்றது என்பதை நான் கூற விரும்புகின்றேன்.என்று ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மன்னார் முசலி தேசிய பாடசாலை விளையாட் டரங்கில் நேற்று இடம்பெற்ற தேசிய மீலாதுன் நபி நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேசிய மீலாதுன் நபி விழாவின் சிறப்புரை அஷ்ஷெய்க் பி.நிஹ்மத்துல்லாஹ் மௌலவியால் ஆற்றப் பட்டது. தேசிய மீலாதுன் நபி விழா 2023இக்கான நினைவு முத்திரை மற்றும் முதல் நாள் அட்டையும் வெளியிடப்பட்டதுடன், தபால் மா அதிபர் ருவன் சத்கு மாரவினால் ஜனாதிபதிக்கு முதல் முத்திரை மற்றும் முதல் நாள் அட்டை என்பன வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்ததாவது:

மன்னார் மாவட்டத்தில் நான் கலந்துகொண்ட இரண்டாவது சமய விழா இதுவாகும். சில மாதங்க ளுக்கு முன்னர் மடு தேவாலயத்தில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டோம். இந்த நிகழ்வை பிரமாண்டமான முறையில் ஏற்பாடு

☞ 2

# மின்சாரக் கட்டண உயர்வை எதிர்த்த ஆர்ப்பாட்டத்தில் பொலிஸ் இடையூறு

## கம்பளையில் நேற்றுப் பதற்றம்

மின்சாரக்கட்டண அதிகரிப் புக்குஎதிர்ப்புத்தெரிவித்துகம்பளை நகரில் நேற்று முன்னெடுக்கப் பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்துக்கு பொலிஸார் இடையூறுகளை விளைவித்தமையால் பதற்ற மான நிலைமை உருவாகியிருந் தது.

கம்பளைரயில்நிலையத்துக்கு முன்பாக, கம்பளை மக்கள் போராட்ட அமைப்பு மற்றும் சிவில் அமைப்புக்கள் இணைந்து இந்தப் போராட்டத்தினை முன்னெடுத்தி ருந்தன.

இதன்போது, மின்சார கட்ட ணங்களை உயர்த்தி மக்களின் வயிற்றில் அடிக்க வேண்டாம் என்பதுள்ளிட்ட கோசங்கள் போராட் டக்காரர்களால் எழுப்பட்டன.

அதனைத்தொடர்ந்துஅவர்கள் கம்பளைபஸ்நிலையத்தைநோக்கி மக்கள் கையொப்பத்தினைப் பெறு வதற்காகப் பேரணியாகச் செல்ல முனைந்தனர்.

அச்சமயத்தில் அங்கு கூடியி ருந்த பொலிஸார் அவர்களைத் தடுத்து நிறுத்தியதோடு கலைந்து செல்லுமாறு அறிவித்தனர்.

☞ 2

# மின்சார சபையின் நட்டத்தை அதுவே ஈடுசெய்யவேண்டும்

## நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

இலங்கை மின்சார சபையின் நட்டத்தினை அந்நிறுவனமே ஈடு செய்ய வேண்டுமென நிதி இரா ஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

மின்சார சபையினால் முன் வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக மின் கட்டண

☞ 2



# போர் முடிவடைந்த பின்னரும்கூட மன்னாரில் அபிவிருத்தி இல்லை

## ஜனாதிபதி முன்பாக காதர் மஸ்தான் எடுத்துரைப்பு

போர் நிறைவடைந்த பின்னரும் மன்னார் அபிவிருத்தி அடையவில்லை என்று இராஜாங்க அமைச்சரும் மன்னார் மற்றும் முல்லைத்தீவு அபிவிருத்திக் குழுவின் தலைவருமான காதர் மஸ்தான் தெரிவித்தார்.

மன்னார் முசலி தேசிய பாடசாலை விளையாட் டரங்கில் நேற்று இடம்பெற்ற தேசிய மீலாதுன் நபி நிகழ்வில் கலந்து கொண்டு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்பாக உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் தெரிவித்த தாவது:

தேசிய மீலாதுன் நபி விழாவில் கலந்து கொள் வதற்காக ஜனாதிபதி மன்னாருக்கு வருகை தந்தமை எமது மக்களுக்குக் கிடைத்த கௌரவமாகவே கருதுகின்றோம். போர் நிறைவடைந்த பின்னர் இப்பிரதேசம் அபிவிருத்தி அடையவில்லை.முறை யான திட்டமிடல் இன்றி

☞ 2



# யூரியா கொள்வனவு இன்னும் இல்லை காரணமான இருவருக்கு இடமாற்றம்

விவசாய அமைச்சில் உர விநி யோகத்திற்கு பொறுப்பாகவிருந்த உயரதிகாரிகள் இருவரை உடன் அமுலுக்கு வரும் வகையில் இடம ாற்றம் செய்ய விவசாய அமைச்சு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பில் அமைச்சு விடுத்துள்ள அறிவிப்பில் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது:

பெரும்போகத்தில், விவசாயி களுக்கு தேவையான யூரியா உரத்தைகொள்வனவுசெய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கி 3 மாதங்கள் கடந்தும் இதுவரை விலை மனு கோருவதற்கு நடவ டிக்கை எடுக்காமையின் காரண மாக உரிய அதிகாரிகள் இடமாற்றத் துக்கு உள்ளாக நேரிட்டுள்ளது.

பல நாடுகளுக்கிடையே நில வும் மோதல்கள்

☞ 2

# மாவீர் துயிலும் இல்லங்களின் துப்புரவு பணிகள் தொடக்கம்



அடுத்த மாதம் மாவீரர் வாரம் மற்றும் நாள் வருவதையொட்டி மாவீரர் துயிலும் இல்லங்களில் துப்புரவுப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டம் விசுவமடு தேரா வில் துயிலும் இல்லத்தில் நேற்று மாவீரர் துயி லும் இல்ல துப்புரவுப் பணிகள் முன்னெடுக்கப்பட் டன.

தேராவில் மாவீரர் துயிலும் இல்ல பணிக்குழு வின் புதிய நிர்வாகத்தின் ஏற்பாட்டில் இந்தச் சிரம தானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. இச் சிரம மானப்பணியில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனும் கலந்துகொண்டார். (113)

# தனியார் மயமாக்கலினை எதிர்த்து டெலிகொம் ஊழியர்கள் போர்க்கொடி

## தொடர் தொழிற்சங்க நடவடிக்கைக்குத் திட்டம்

தனியார் மயமாக்கலுக்கு எதிராக சிறி லங்கா டெலிகொம் ஊழியர்கள் தொடர்ச்சியான தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாக தொலைத் தொடர்பு ஊழியர் சங்கத்தின் தலைவர் ஜகத் குருசிங்க தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சிறி லங்கா டெலிகொம் நிறுவனத்தை தனியார் மயமாக்கும் தீர்மானத்தை எதிர்த்து அடுத்த மாதம் பெரும் வேலைநிறுத்தப் போராட்டம் ஒன்று முன்னெ டுக்கப்படவுள்ளது. தற்போது தனியார் மயமாக்க லுக்கான மதிப்பீட்டு பணியில் சர்வதேச நிறுவனம் ஒன்று ஈடுபட்டு வருகிறது.

உலக வங்கியுடன் இணைக்கப்பட்ட சர்வதேச நிறுவனம் குறித்த நடவடிக்கைகளுக்காக இலங்கை யில் செயற்பட்டு வருகின்றது. அத்தகைய நிறுவனம் இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான உரிமைகளைக் கொண்டிருக்கவில்லை.

மேலும், உலக வங்கி கடன்களை வழங்கும் அதேவேளை, உள்விவகாரங்களில்

☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ரி.சரவணராஜா உட்பட சமகாலத்தில் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் கொழும்பில் உள்ள இராஜதந்திரிகளின் கவனத்திற்கு கொண்டு செல்வதற்கான தனித்தனியாக கடிதங்களும் இறுதியாகியுள்ளன.

இவற்றில் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் கையொப்பங்களை இடுவதெனக் கடந்த வாரம் நடைபெற்ற சந்திப்பின்போது தீர்மானிக்கப்பட்டது.

அதற்கமைவாக கட்சித் தலைவர்கள் இன்று (ஞாயிற்றுக்கிழமை) கையொப்பங்களை இட்டு அப்பணி பூர்த்தியாகும் என்று எதிர்பார்க்கின்றேன்"-என்று நேற்று நம்பிக்கை வெளியிட்டிருந்தார் விக்னேஸ்வரன்.

தமிழ்த் தலைவர்கள் இந்தக் கடிதத்தில் கையெழுத்திடுவார்கள் என்று அவரும் நீண்டநாள்களாக நம்பிக்கொண்டிருக்கிறார். ஆனால் அது நடந்தபாடில்லை.

நீதிபதி சண்முகராஜா விவகாரம் தொடர்பில் கடந்த வாரம் கடையடைப்புப் போராட்டம் நடத்திய 7 கட்சிகளுக்கும் இடையில், அந்த விவகாரம் தொடர்பில் இராஜதந்திரிகளுக்கு அனுப்புவதற்கான கடிதத்தில் கையொப்பம் இடுவதில் எந்தச் சிக்கலும் இல்லை. அதற்கு அவர்கள் தயா ராகவே இருகின்றார்கள். ஆனால், மோடிக்கு அனுப்பும் கடிதத்தில் கையொப்பம் இடுவதில்தான் இழுபறி நீடிக்கிறது.

அந்தக்கடிதத்தில்கையெழுத்திடடெலோ பின்னடிக்கிறது என்பதையும் தமிழ் அரசு மௌனம்காக்கிறதுஎன்பதையும்ஏற்கனவே வாசகர்களுக்குத்தெரியப்படுத்தியிருந்தேன். அந்த நிலையே தொடர்ந்தும் நீடிக்கிறது. கடிதத்தில் கையெழுத்திடுவதில் ரெலோ "வரும் ஆனால் வராது" பாணியிலேயே நடந்துகொள்கிறது. கையெழுத்திடமாட்டேன் என்று அந்தக் கட்சி இதுவரை திட்டவட்டமாகத் தெரிவிக்கவில்லை. அதேநேரம் கையெழுத்திட அந்தக் கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் வருவதுமில்லை. இன்று வருகிறேன், நாளை வருகின்றேன் என்று சொல்வாரே தவிர, கடைசியில் ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லி அல்லது சொல்லாமலேயே கையெழுத்திட வராமல் இருந்துவிடுவார்.

கூட்டமைப்பில் இருந்தபோதே அவர் அப்படித்தான் என்பது புளொட் மற்றும் ஈபிஆர்எல்எவ் கட்சிகளுக்குத் தெரியும் என்பதால் அவர்களுக்கு இது ஆச்சரியமளிக்கவில்லை. கட்சிக்குள்ளேயே இருந்தவர் என்பதால் சிறீகாந்தாவுக்கும் இந்த விடயங்கள் அத்துப்படி. அதனால்தான் அவர் யார் வந்தாலும் வராவிட்டாலும் கடிதத்தை அனுப்புவோம் என்று ஒற்றைக்காலில் நிற்கிறார். ஆனால், விக்னேஸ்வரனுக்கு இது புதிய விடயம். அவரோ எப்படியாவது கையெழுத்து வைத்துவிடுவார் என்று எதிர்பார்த்து "இலவு காத்த கிளியாக" காத்திருக்கிறார்.

கடிதத்தில் ரெலோ கையெழுத்திட பின்னடிப்பதற்கு, மோடியைச் சந்திக்கும் விவகாரத்தில் விக்னேஸ்வரன் தன்னை முதன்மைப்படுத்தி விடுவாரோ என்கிற சந்தேகம் இருப்பது ஒரு காரணமாக இருக்கலாம் என்பதை அந்தக் கட்சியின் நாடாளுமன்றஉறுப்பினர்வினோநோகராதலிங்கம் முகப்புத்தகத்தில் தெரிவித்த கருத்துக்களையும் மேற்கோள்காட்டி ஏற்கனவே தெரியப்படுத்தி இருந்தேன். ஆனால், அது மட்டுமே அதற்கான காரணம் இல்லையோ என்றும் சில அரசியல் வட்டாரங்கள் சந்தேகிக்கின்றன.

வவுனியாவில் சீனித் தொழிற்சாலை ஒன்றை அமைப்பதில் ரெலோவுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில்காணப்படும்இணக்கநிலையை, நல்லுறவை, அன்னியோன்னியத்தை இந்தக் கடிதம் கெடுத்துவிடுமோ என்கிற அச்சமும் பின்னடிப்புக்களுக்கான காரணம் என்றும் அந்த வட்டாரங்கள் சுட்டிக் காட்டுகின்றன. ரணிலுக்கு நெருக்கடி கொடுக்கக்கூடிய எந்தவொரு விடயத்திலும் தன்னைத் தொடர்புபடுத்திக்கொள்ளாமல் இருப்பதற்கான தந்திரமே இது என்று வட்டாரங்கள் கூறுகின்றன. அதற்கொரு உதாரணத்தையும் அவை அண்மைய நடவடிக்கையில் இருந்து எடுத்துக்காட்டுகின்றன.

நீதிபதி சரவணராஜாவுக்கு நீதி கேட்டு வெள்ளிக்கிழமை நடந்த அடைப்புப் போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கும் செய்தியாளர்கள் சந்திப்பு பல மாவட்டங்களிலும் நடத்தப்பட்டபோது அதில் கலந்துகொள்வதற்கு ரெலோ தலைவர் இணங்கியிருந்தார் என்றும், ஆனால் பின்னர் அவற்றில் அவர் கலந்துகொளளாது தவிர்த்துவிட்டார் என்றும் அந்த வட்டாரங்கள் கூறுகின்றன. கிளிநொச்சியில் கடையடைப்புக்கு ரெலோ ஆதரவு தெரிவித்திருந்தது, அது தமிழ் மக்களின் வாக்குகளை அங்கு தாம் இழந்துவிடாமல் இருப்பதற்கான நகர்வு, மற்றும்படி இந்தப் போராட்டத்திற்கு ஆதரவு திரட்டும் நடவடிக்கையில் ரெலோ தலைமை அதிக ஈடுபாடு காட்டவில்லை என்பதே அவர்கள் சுட்டிக்காட்டும் விடயம். அதற்குக் காரணம் ரணிலைப் பகைத்துக்கொள்ள இப்போதைக்கு அவர்கள் விரும்பாததுதான் என்பது அவர்களின் கருத்து.

அதுஉண்மையாஇல்லையாஎன்பதை ரெலோ தலைமைதான் உறுதிப்படுத்த வேண்டும். கேட்டால் இல்லையென்றுதான் சொல்வார்கள் என்பது வேறுவிடயம். இதற்கிடையில், எப்படியும் இழுத்து வளைத்து மோடிக்கான கடிதத்தில் கையொப்பத்தைப் பெற்றுவிடலாம் என்று எதிர்பார்க்கப்பட்ட மாவையரும் கடைசி நேரத்தில் அதிலிருந்து மெல்ல நழுவிவிட்டார். ஏற்கனவே தமிழ்க் கட்சிகளின் போராட்டத்திற்கு ஆதரவளிப்பது என்கிற முடிவைத் தன்னிச்சயயாக எடுத்து, கூட்டங்களுக்குத் தனக்குப் பதிலாகத் தனது மகனை அனுப்பி கட்சியின் ஆலோசனை இன்றி நடக்கிறார் என்று அரசியல்குழுக் கூட்டத்தில் விமர்சனங்களை எதிர்கொண்ட அனுபவத்தினாலோ என்னவோ மாவையரும் இந்தி விடயத்தில் பின்னடித்துவிட்டார்.

கடிதங்களில் கையொப்பம் இடுவது தொடர்பில் விக்னேஸ்வரன் நேற்று தலைவர்களுடன் தொலைபேசியில் பேசியபோது, இராஜதந்திரிகளுக்கான கடிதத்தில் கையொப்பம் இடுவதில் தனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றும் மோடிக்கான கடிதத்தில் கையொப்பம் இடுவதனால், அது தொடர்பில் பெருந்தலைவர் இரா. சம்பந்தனுடன் கலந்துரையாடிவிட்டே செய்யமுடியும் என்றும் மாவையர் கூறிவிட்டார். சம்பந்தரிடம் சென்றால் கடிதத்தில் கையெழுத்திடமாட்டார் என்று தெரிந்தேதான் மாவையரை எப்படியாவது இதற்குள் இழுத்திவிடலாம் என்றும் நம்பியிருந்த நிலையில் அவர் சம்பந்தனைச் சுட்டிக்காட்டுவது "வேலைக்காகிற காரியமில்லை" என்பது இப்போது விக்னேஸ்வரனுக்கும் புரியவந்துள்ளது.

- இடிமின்னல் -
(idiminnal23gmail.com)

## விகிதாசார தேர்தல் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதேநேரம், தினேஷ் குணவர்த்தன தலைமையில் இரண்டு வருடங்களாக நாடாளுமன்ற தெரிவுக்குழுவொன்று தேர்தல் முறைமை சம்பந்தமாக ஆராய்ந்து வருகின்றது. அதில் ஆளும் கட்சியில் எட்டுப்பேரும், எதிர்க்கட்சியில் எட்டுப்பேருமான அங்கத்தவர்கள் உள்ளனர். அதில் நானும் ஓர் உறுப்பினராக உள்ளேன். அந்தக் குழு மாகாணசபைகளுக்கானதேர்தல்முறைமை தொடர்பில் ஆராய்ந்தது. அதன்போது இறுதியில் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கையொப்பமின்றி இறுதியான அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. அது ஜனாதிபதியிடத்திலும் கையளிக்கப்பட்டுள்ளது.

குறித்த குழுவில் ஒரு விடயம் மட்டும் ஏகோபித்தஇணக்கப்பாட்டின்அடிப்படையில் எடுக்கப்பட்டது. அதாவது தடைப்பட்டுள்ள மாகாண சபைகளுக்கான தேர்தலை முன்னெடுப்பதற்குச் சட்டத் திருத்தம் செய்வதெனவும் பழைய முறைமையின் பிரகாரம் அத்தேர்தலை நடத்துவதெனவும் இணக்கப்பாடு எட்டப்பட்டது. ஆனால் அந்த இணக்கப்பாடு எட்டப்பட்டு இரண்டு வருடங்களாகின்றபோதும் இன்னமும் தேர்தல் நடத்தப்படவில்லை. முதலில் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துங்கள். வாக்குறுதி அளிக்கப்பட்டதன் படி அதனை நடத்திக் காண்பியுங்கள்.

அதேநேரம், தமிழ், முஸ்லிம் கட்சிகளும், தென்னிலங்கையில் உள்ள சிறிய கட்சிகளும் விகிதாசார முறைமையை நீக்குவதற்கு இடமளிக்கக்கூடாது. தமிழ் முற்போக்குக்கூட்டணிஎக்காரணம்கொண்டும் அதற்கு இடமளிக்காது என்றார்.

## இரவில் மழை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சந்தர்ப்பங்களில் இடி, மின்னல் தாக்கங்கள் தொடர்பில் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

தென்மேல்மற்றும்அதனைஅண்மித்த மத்திய மேற்கு வங்காளவிரிகுடா கடற்பரப்பில் நீண்டநாள் மீன்பிடி படகுகள் பயணிக்கும்போது அவதானத்துடன் செயற்பட வேண்டியது கட்டாயமாகின்றது என்றுள்ளது.

இதனிடையே, பதுளை மாவட்டத்தில் உள்ள நீர்வீழ்ச்சிகளை பார்வையிட மற்றும் நீராடச் செல்லும் போது மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு பதுளை மாவட்ட அனர்த்த பேரிடர் பிரிவினால் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ராவண எல்ல, துன்கிந்த நீர்வீழ்ச்சி, தியலுமநீர்வீழ்ச்சி உள்ளிட்ட நீர்நிலைகளில் நீர்மட்டம் அதிகரித்து வருவதாக பதுளை மாவட்ட பேரிடர் முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

## மின்சாரக் கட்டண ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மேலும் பதாகைகள் மற்றும் கொடிகளை போராட்டக்காரர்களிடமிருந்து பறித்தனர்.

போராட்டக்காரர்கள், பொலிஸாரின் வாழ்க்கைக்கும் சேர்த்துத்தான் தாங்கள் போராடுகின்றனர் எனக் கூறினார்கள். எனினும் அதனை மறுதலித்த பொலிஸார் அவர்களை அங்கிருந்து கலைந்து செல்லும் வரையில் மிரட்டினார்கள்; விரட்டினார்கள். இதனால் அப்பகுதியில் பதற்றம் ஏற்பட்டது.

## இந்தியாவுக்கான கடல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
செய்தமைக்காக சமய கலாசார அலுவல்கள் அமைச்சுக்கும் முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்நிகழ்வுடன் இங்கு புதிய பாடசாலை கட்டடத் திறப்பு, வீட்டுத்திட்டம் போன்ற அபிவிருத்தி வேலைத்திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. மன்னார் மாவட்டத்திற்கு இந்த அபிவிருத்தி தேவை. இந்தப் பகுதி போரால் பாதிக்கப்பட்ட பகுதி. எனவே இந்தப் பிரதேசங்களில் இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றுவதற்கான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றோம்.

குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் வீதிகள் அமைப்பது தொடர்பில் தொடர்ந்தும் கலந்துரையாடி வருகின்றோம். அமைச்சர் நாடாளுமன்றத்திலும் அதை ஞாபகப்படுத்துகிறார். குறிப்பாக இப்பிரதேசத்தில் வீடுகளைநிர்மாணிப்பதுபோன்றுகல்வியும் அபிவிருத்திசெய்யப்படவேண்டும். மன்னார் நகரில் கல்வி சிறப்பாக உள்ளது. ஆனால் மாவட்டத்தின் பிற பகுதிகளில் உள்ள கல்வி நிலை குறித்து திருப்தி அடைய முடியாது.

அத்துடன், இப்பிரதேசத்தில் பெரும் அபிவிருத்தித் திட்டத்தையும் திட்டமிட்டுள்ளோம். இந்தியாவிற்கும் மன்னாருக்கும் இடையில் கடல் போக்குவரத்து சேவையை ஏற்படுத்துவதற்கான ஏற்பாடுகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. காங்கேசன்துறையில் ஆரம்பித்தோம். அடுத்து தலைமன்னாரில் ஆரம்பிக்கப்படும். அதேநேரம் இந்தியாவும் இலங்கையும் இணைந்த மின்சாரக் கட்டமைப்பை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளன. அது இந்த மன்னார் ஊடாகவும் இடம்பெறுகின்றது என்பதை நான் கூற விரும்புகின்றேன்.

இது வெறும் ஆரம்பம்தான். இதன் மூலம் எதிர்காலத்தில் மன்னார் அபிவிருத்தி அடையும். குறிப்பாக இந்த பகுதியில் பசுமை பொருளாதாரம் மற்றும் பசுமை வலுசக்தி ஆற்றல் என்பன அதிகரிப்பதற்கு அதிக சாத்தியம் உள்ளது. இங்கு கிடைக்கும் சூரிய சக்தியை கொண்டு இப்பகுதியை மேம்படுத்த முடியும். புத்தளத்திலிருந்து மன்னார் வரை யாழ் குடாநாட்டின் ஊடாக முல்லைத்தீவு வரை அந்த வாய்ப்பு உள்ளது. இதன் மையமாக பூநகரி நகரை உருவாக்க நாம் எதிர்பார்த்துள்ளோம்.

மேலும் மன்னாரை சுற்றுலா மையமாக மாற்ற நாங்கள் விரும்புகிறோம். அதேநேரம் மீன்பிடி தொழில் வளர்ச்சியடையும் போது மன்னாரும் பொருளாதார ரீதியில் முன்னேற்றம் அடையும். நாம் இங்கு நபி நாயகத்தை நினைவு கூர்வோம். நபிகள் நாயகம் அவர்கள் கூறிய அதே கோட்பாடுதான் இன்று இலங்கையில் உள்ளது. எனவே இந்த விழாவை தேசிய விழாவாக கருதுகிறோம்.

அனைத்து மதங்களையும் சமமாக நடத்துவதே எங்கள் கொள்கை. மேலும் அனைவருக்கும் சம உரிமை வழங்குவதே எங்கள் நோக்கம். இங்குள்ள முஸ்லிம் மக்களுக்கு சில பிரச்சினைகள் உள்ளன. அரசும் அவற்றைத் தீர்க்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது என்பதை இங்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நான் வங்குரோத்தான நாட்டையே பொறுப்பேற்றேன். அந்த வங்குரோத்து நிலையில் இருந்து இன்னும் மீண்டு வருகிறோம். எனவே, அந்த பணியை முறையாக மேற்கொள்ள உள்ளோம்.

மொராக்கோ முதல் இந்தோனேஷியா வரை ஆபிரிக்கா, ஐரோப்பா என எல்லா இடங்களிலும் நபிகளாரின் இஸ்லாமியக் கோட்பாடு பரவியுள்ளது. நபிகளார் இந்தக் கோட்பாட்டைப் பிரச்சாரம் செய்தபோது, எல்லா கிறிஸ்தவ யூதர்களும் அந்தப் பகுதியில் வாழ்ந்தார்கள். எந்தப் பிரச்சினையும் ஏற்படவில்லை. ஆனால் இன்று பெரிய பிரச்சினைகள் உள்ளன. குறிப்பாக, பலஸ்தீன விவகாரம் தொடர்பாக கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் விவாதம் நடைபெற்றது. அதற்கு முன்னதாகவே ஆளும் தரப்பு தனது கருத்தை தெரிவித்திருந்தது. நாடாளுமன்றத்திலும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. 20 உணவு லாரிகள் காஸாவுக்கு கொண்டு செல்லப்பட்டதாக கேள்விப்பட்டோம். ஆனால் இது போதுமா என்ற கேள்வி எழுகிறது.

இஸ்ரேல் - ஹமாஸ் போர் காரணமாக பலஸ்தீன மக்கள் காஸா பகுதியில் சிக்கித் தவிக்கின்றனர். அந்த மக்களின் துயரத்தை நாங்கள் அங்கீகரிக்க முடியாது. அந்த மக்களுக்கு தேவையான உணவுகளை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம். உணவுஎகிப்திலிருந்துவழங்கப்படுகின்றது. இஸ்ரேல் பகுதியில் இருந்தும் உணவு வழங்கப்பட வேண்டும். மேலும் தண்ணீர் கொடுக்க வேண்டும்.

இஸ்ரேல் - ஹமாஸ் மோதல் ஒரு பிரச்சினை. ஆனால் இந்தப் போராட்டத்தில் சாதாரண பலஸ்தீன மக்கள் பலியாகிவிடக் கூடாது. எனவே அதனை தீர்க்க எகிப்து உள்ளிட்ட அரபு நாடுகள் நடவடிக்கை எடுத்து வருகின்றன. மற்ற நாடுகளும் இதற்கு சம்மதம் தெரிவித்துள்ளன.

குறிப்பாக இந்தப் பிரச்சினையைத் தீர்த்து அந்தப் பிரதேசங்களில் அமைதியை ஏற்படுத்துவதற்கான ஐக்கிய நாடுகள் சபை பொதுச் செயலாளரின் செயற்பாடுகளுக்கு, எமது பூரண ஆதரவை வழங்குவோம் என்பதை குறிப்பிட விரும்புகின்றேன். பலஸ்தீன நாடு ஒன்று உருவாக வேண்டும் என்பதையும் குறிப்பிட வேண்டும் என்றார்.

## மின்சார சபையின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டமை தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஏதேனுமொரு அரச நிறுவனம் நட்டங்களைச் சந்திக்கின்றபோது அதனை தொடர்ச்சியாக திறைசேரியால் ஈடுசெய்யமுடியாது. அந்த நிறுவனங்களே தமது நட்டங்களை ஈடு செய்ய வேண்டியுள்ளது.

அதனடிப்படையில், இலங்கை மின்சார சபையானது தொடர்ச்சியாக நட்டத்தைச் சந்தித்துவருவதால் அது இலாபமீட்டுவதற்கான பயணத்ததில் சுயாதீனமான தீர்மானங்களை எடுக்கலாம்.

நீர், பெற்றோலியம் ஆகியவற்றை முறையாக முகாமை செய்வதுடன், மழை வீழ்ச்சி கிடைக்கின்றபோது அதனை இலங்கைமின்சாரசபையானதுஉரியவாறு பயன்படுத்தும்.

எமது ஆட்சியைப் பொறுத்தவரையில் அரச நிறுவனங்கள் சரியான முகாமைத்துவத்தின் கீழ் இலாபமீட்டுபவையாக செயற்பட வேண்டியது மிகவும் அவசியமாகின்றது.

உரியவாறு முகாமையில்லாது, நட்டத்தில் அரச நிறுவனங்கள் செயற்படுகின்ற போது, பொதுமக்கள் தற்போது முகங்கொடுத்திருக்கும் சுமைகளை விடவும் அதிகமான சுமைகளுக்கு முகங்கொடுக்க நேரிடும்.

கடந்த காலத்தில் பின்பற்றிய அரச நடைமுறைகளுக்கு அப்பால், உலகிலுள்ள சிறந்த நடைமுறைகளை நாம் பின்பற்றுவதற்குத் தீர்மானித்துள்ளோம். அதன் மூலமாகவே நாட்டின் பொருளாதாரத்தினை கட்டியெழுப்ப முடியும் என்பதை உறுதியாக நம்புகின்றோம்

இந்தச்செயற்பாடுகளை நாம் ஆரம்பித்துள்ளமையால் தான் சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியன மீண்டும் அவர்களது திட்டங்களை நடைமுறைப்படுத்தவதற்கு ஆரம்பித்துள்ளன. அத்துடன் இருதரப்பு கடன்வழங்குநர்களும் தமது திட்டங்களை முன்னெடுப்பதற்கு முன்வந்துள்ளனர் என்றார்.

## தனியார் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தேவையற்ற தலையீடுகளை மேற்கொள்வது பொருத்தமற்றதாகும்.

இந்த பின்னணியில் பெரும் சாதி காணப்படுகின்றது.பொருளாதாரத்தினை மேம்படுத்துவதாகக் கூறி நாட்டின் வளங்களை விற்பனை செய்வதற்கு இடமளிக்க முடியாது என்றார்.

## யூரியா கொள்வனவு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
காரணமாக உலக சந்தையில் யூரியா உள்ளிட்ட அனைத்து உரங்களின் விலையும் அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அமைச்சரவையின் அனுமதி கிடைத்த மே மாதத்தில் உரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தால், யூரியா உரத்தை மிகக் குறைந்த விலையில் கொள்வனவு செய்திருக்க முடியும்.

அந்த காலகட்டத்தில், ஒரு மெற்றிக் தொன் யூரியாவை 350 டொலருக்கு கொள்வனவு செய்திருக்கலாம். எனினும், தற்போது ஒரு மெற்றிக் தொன் யூரியா 650 டொலர் வரை அதிகரித்துள்ளது. இதனால் அரசுக்குப் பெரும் நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது என்றுள்ளது.

## போர் முடிவடைந்த ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மேற்கொள்ளப்பட்டு வரும் மீள்குடியேற்ற நடவடிக்கைகளினால் குறித்த பிரதேசத்தில் அபிவிருத்தி மற்றும் முதலீடுகளுக்காக காணிகளை பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

உங்கள் தலைமையில் எனது மாவட்ட மக்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்படும் என்பதை குறிப்பிட வேண்டும். எந்த நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்ததோ, அந்த நாட்டின் பொறுப்பை ஏற்று பொருளாதாரத்தை கட்டியெழுப்ப உழைத்தீர்கள். மக்களின் அவலங்களை அறிந்த ஜனாதிபதி என்ற வகையில் இப்பிரதேசங்களில் மீள்குடியேற்றப் பிரச்சினைக்குத் தீர்வை வழங்குவீர்களென நம்புகின்றோம் என்றார்.

# பாகிஸ்தான் சித் மாநிலத்துக்கு வருகை தருமாறு கிழக்கு மாகாண ஆளுநர் செந்திலுக்கு அழைப்பு!



ஐக்கியநாடுகள்சபையால்ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் இலங்கையிலிருந்து பாகிஸ்தானிற்கு புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து சீனாவிற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள கிழக்கு மாகாண ஆளுநரும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமானுக்கும் பாகிஸ்தான் நாட்டின் சிந் மாநில முதலமைச்சர் மக்பூல் பக்காருக்கும், இடையில் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

இந்தக்கலந்துரையாடலில், இலங்கையிலிருந்து பாகிஸ்தானுக்கு புலம்பெயர்ந்து சென்ற தொழிலாளர்கள் மேசன், ஆடை தொழிற்சாலை, மோட்டார் வாகன உதிரிபாகங்கள், உற்பத்திதுறை உட்பட பல நிறுவனங்களில் தொழிலாளர்களாகப் பணிபுரிகின்றனர். அவர்கள் அங்கு எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து முதலமைச்சர் கவனத்துக்கு செந்தில் தொண்டமான் கொண்டுசென்றார். செந்தில் தொண்டமான் முன்வைத்த கோரிக்கையை ஏற்று, அவர்களுக்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக முதலமைச்சர் மக்பூல் பக்காரு ஒப்புக்கொண்டதுடன், பாகிஸ்தானில் உள்ள சித் மாநிலத்திற்கு வருகை தருமாறு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கு உத்தியோகபூர்வ அழைப்பும் விடுத்துள்ளார். (05)

# மட்டு. கூளாவடியில் வீட்டின்முன் நிறுத்தப்பட்ட சைக்கிள் திருட்டு

## சி.சி.ரி.வியில் சிக்கிய நபர்



மட்டக்களப்பு பொலிஸ் தலைமையக பிரிவிலுள்ள கூளா வடி பிரதேசத்தில் வீடு ஒன்றின் முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மவுன்டன் ரக சைக்கிள் ஒன்றை சனிக்கிழமை திருடிச் சென்ற நபர் தொடர்பாக தகவல் தெரிந்தவர்கள் தமக்கு அறிவிக்குமாறு பொலிஸார் பொது மக்களின் உதவியை கோரியுள்ளனர்.

சனிக்கிழமை பகல் 12 மணியளவில் கூளாவடி முதலாம் குறுக்கு 'ஏ' வீதியிலுள்ள வீடொன்றின் முன்னால் நபர் ஒருவர் மவுன்டன் ரக சைக்கிளை நிறுத்திவிட்டு, வீட்டுக்குள் சென்று, பின்னர், அரை மணிநேரம் கழித்து வெளியே வந்து பார்த்தபோது, அங்கே சைக்கிள் களவாடப்பட்டிருந்தது.

இந்நிலையில், நபர் ஒருவர் சைக்கிளை திருடும்காட்சி அப்பகுதியிலுள்ள மற்றுமொரு வீடுஒன்றின் முன்னால் பொருத்தப்பட்டுள்ள சிசிடிவி கமராவில் பதிவாகியுள்ளது.

அதன் அடிப்படையில், சைக்கிளை திருடியநபர் தொடர்பில் தகவல் தெரிந்தவர்கள் உடனே அறிவிக்குமாறு பொலிஸார் பொது மக்களின் உதவியை நாடியுள்ளனர். (05)

# 200 கிலோ ஹெரோயினோடு படகில் பயணித்த ஐந்து பேர் தேவேந்திரமுனை கடலில் கைது!

தேவேந்திரமுனையில் உள்ள கடற்பரப்பில் 400 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியுள்ள ஹெரோயின் போதைப் பொருளை மீன்பிடி படகு மூலம் கடத்திச் செல்ல முற்பட்ட 5 பேரை கடற்பரையினர் கைதுசெய்து, சந்தேக நபர்களை நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை கரைக்கு கொண்டுவந்தனர்.

இதன்போது போதைப்பொருள் மற்றும் சந்தேக நபர்கள் பயணித்த மீன்பிடி படகும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டது. சந்தேக நபர்கள் வைத்திருந்த போதைப்பொருள் 200 கிலோவுக்கும் அதிக எடையுடையது எனக் கூறப்படுகிறது.

காலைக்கதிர் Kalaikkathir

# மலையக மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஐ.நாவிடம் விளக்கம்

மலையக மக்கள் எதிர்நோக்கியுள்ள உரிமை ரீதியான பிரச்சினைகள், பெருந்தோட்ட நிறுவனங்களின் அடக்குமுறைகள், உழைப்பு சுரண்டல்கள் மற்றும் மலையக மக்களுக்காக முன்னெடுக்கப்பட்டுவரும் வேலைத்திட்டங்கள் தொடர்பில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகராலய பிரதானிகளிடம் தெளிவுப்படுத்தியுள்ளார்.

அத்துடன், மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள்உயர்ஸ்தானிகர்அலுவலகத்தால் முன்னெடுக்கப்படும்வேலைத்திட்டங்களுக்கு தமது தொழிற்சங்கத்தின் முழு ஆதரவு வழங்கப்படும் எனவும் அமைச்சர் உறுதியளித்துள்ளார்.



ஜெனிவாவுக்குபயணம்மேற்கொண்டுள்ள அமைச்சர்ஜீவன்தொண்டமான்,ஐக்கியநாடுகள் மனிதஉரிமைகள்உயர்ஸ்தானிகர்அலுவலக பிரதானிகளுடன் சந்திப்பில் ஈடுபட்டார். ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் உயர்தானிகர் அலுவலகத்தின் பிரதானி மேதகு செட்யா ஜெனிங்ஸ், இலங்கை தொடர்பான இலங்கைக்கான மனித உரிமை பிரிவின் தலைம அதிகாரி எலினா செங் ஆகியோர் சந்திப்பில் பங்கேற்றனர். அமைச்சருடன், இ.தொ.காவின் உப தலைவரும், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவருமான பாரத் அருள்சாமி, அமைச்சின் ஆலோசகர் ஹரித்த விக்கிரமசிங்க ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

பெருந்தோட்ட தொழிலாளர்கள் கடந்த 200 வருடங்களாகக் கடந்துவந்த பாதை குறித்தும், அவர்கள் எதிர்நோக்கிய சவால்கள் மற்றும்மனிதஉரிமைரீதியானபிரச்சினைகள் தொடர்பிலும் அமைச்சர் தலைமையிலான குழுவினர் எடுத்துரைத்தனர். 2021 ஆம் ஆண்டு இலங்கைக்கு பயணம் மேற்கொண்டிருந்த ஐ.நாவின் விசேட அறிக்கையாளர் டொமொயோ ஒகோடோவா , மலையக பெருந்தோட்ட சமூகத்தின் நிலை குறித்து அறிக்கை தாக்கல் செய்திருந்தார்.

மீண்டும் ஒருமுறை மனித உரிமை உயர்ஸ்தானிகராலய தூதுக்குழு இலங்கைக்கும் பெருந்தோட்ட பகுதிகளுக்கும் விஜயம் மேற்கொள்ள வர வேண்டும் என்ற அழைப்பையும் அமைச்சர் விடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (05)

## காட்டு யானைத் தாக்குதலால் ஏழு வீடுகளுக்கு பெரும் சேதம்

ஹொரவ்பொத்தான - திம்பிரியத்தாவல கிராமத்தில் காட்டு யானைகளின் தாக்குதலால் ஏழு வீடுகள் சேதமடைந்துள்ளன என அப்பகுதியிலுள்ள மக்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

திம்பிரியத்தாவல கிராமத்தில் சனிக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

தமது கிராமத்தை அண்டிய பகுதியில் யானையின் சரணாலயம் அமைந்துள்ளதாகவும், வேறு இடங்களில் இருந்து கொண்டு வரப்பட்ட யானைகள் அனைத்தும் இங்கே விடப்பட்டுள்ளன எனவும் மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

குறித்த யானைகள் கிராமத்துக்குள் உள்நுழைந்து அட்டகாசம் செய்து வருவதாகவும் சுட்டிக் காட்டுகின்றனர்.

சனிக்கிழமை அதிகாலை வரை ஏழு வீடுகளை உடைத்து சேதப்படுத்தியுள்ளதுடன், வீட்டுத் தோட்டத்தில் நாட்டப்பட்டுள்ள கத்தரி, மிளகாய், மரவள்ளி, வாழை மரம் போன்றவற்றை சேதப்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

யானைகளால் வீடுகள் சேதமாக்கப்பட்டமை தொடர்பில் கிராம உத்தியோகத்தர் ஊடாக பிரதேச செயலகத்துக்கு தெரியப்படுத்தியுள்ளதாகவும் உடனடியாக உடைந்த வீடுகளை நிர்மாணிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இந்நிலையில் குறித்த பிரதேசத்தில் யானைகளின் தாக்குதல் அதிகரித்துவருகின்றமையால் யானை மின் வேலிகளை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (05)

## இந்த ஆட்சியிடம் நிலையானதொரு பொருளாதாரக் கொள்கையில்லை

### சிறிதரன் எம்.பி. குற்றச்சாட்டு




இலங்கை அரசாங்கத்திடம் நிலையான பொருளாதாரக் கொள்கையில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் குற்றம் சுமத்தியுள்ளார்.

தர்மபுரத்திலுள்ள பாடசாலையொன்றில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் மக்கள் தற்போது பாரிய பொருளாதார நெருக்கடியை சந்தித்துள்ள நிலையில் எரிபொருள், எரிவாயு மற்றும் அத்தியாவசிய பொருள்களின் விலையேற்றத்தால் தங்களது வாழ்வாதாரத்தை கொண்டுசெல்ல முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்பொழுது அரசாங்கம் ஐ.எம்.எவ். இன் இரண்டாம் கட்ட நிதியைப் பெறுவதற்காக நாட்டுமக்களுக்கு பெரும் சுமையைகொடுத்துள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (05)

## ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர்களுக்கான வைப்பு பணத்தை அதிகரிக்கத் தீர்மானம்

ஜனாதிபதி தேர்தலுக்காக போட்டியிடும் வேட்பாளர்களுக்கான வைப்பு பணத்தொகையை அதிகரிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதன்படி, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றில் இருந்து ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளருக்கு 50 ஆயிரம் ரூபா என்ற வைப்புத் தொகையை 26 லட்சம்ரூபாவாக அதிகரிப்பதற்கான யோசனையொன்று முன்மொழியப்பட்டுள்ளது. அத்துடன், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் சுயேச்சை வேட்பாளருக்கான வைப்புத் தொகையை 75 ஆயிரம் ரூபாவிலிருந்து 31லட்சம் ரூபாவாக அதிகரிக்க முன்மொழியப்பட்டுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட அரசியல்கட்சியைச்சேர்ந்த ஜனாதிபதி வேட்பாளர் வைப்புச் செய்யக் கூடிய தொகையில் 25 லட்சம் ரூபாவை திரும்பப் பெறக்கூடிய தொகையாகவும், எஞ்சிய ஒரு லட்சம் ரூபாவை திருப்பிச்செலுத்த முடியாத வைப்புத் தொகையாகவும் செலுத்த வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், சுயேச்சை வேட்பாளரின் வைப்புத்தொகையில், 30 லட்சத்தை மீளப் பெற்றுக் கொள்ள முடியும் என அந்த யோசனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

## அடுத்த ஆண்டும் ரணில் ஜனாதிபதியாக வேண்டும்

### ரவி கருணாநாயக்க தெரிவிப்பு

ஐக்கிய தேசிய கட்சியின் விசேட பொது மாநாடு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் அந்தக் கட்சியின் தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

புதிய உலகை எதிர்கொண்டு எதிர்கால சந்ததியினருக்காக நாட்டை உருவாக்குவோம் என்ற தொனிப் பொருளின் கீழ் குறித்த மாநாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியை புதிய உலகிற்கு ஏற்ற வகையில் மறுசீரமைப்பதே இந்த விசேட பொது மாநாட்டின் பிரதான நோக்கம் எனவும் இதன்போது அறிவிக்கப்பட்டது.

இதேவேளை, எதிர்வரும் 2024 ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலிலும் ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க தெரிவு செய்யப்பட வேண்டும் என முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார். (05)

## காணாமல்போன இரண்டு பாடசாலை மாணவர்களும் பொலிஸாரால் மீட்பு

### நாத்தாண்டியவில் சம்பவம்

புத்தளம் - நாத்தாண்டிய பிரதேச பாடசாலை ஒன்றில் புகையிலை மற்றும் சுண்ணாம்பு வைத்திருந்த இரு மாணவர்களை அதிபர் விசாரித்து கண்டித்ததைத் தொடர்ந்து குறித்த இரு மாணவர்களும் காணாமல்போன நிலையில் அவர்களை பொலிஸார் மீட்டுள்ளனர்.

இவ்வாறு காணாமல்போன மாணவர்கள் குருநாகல் பிரதேசத்தை சேர்ந்த 15 வயதுடையவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

மாணவர்கள் காணாமல் போனதை தொடர்ந்து மாணவர்களின் பெற்றோர்கள் வியாழக்கிழமை இரவு பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதனையடுத்து மாரவில தலைமையக பொலிஸாரால் மாணவர்கள் இருவரும் புத்தளம் பிரதேசத்தில் அமைந்துள்ள உறவினர் வீடொன்றிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு பொலிஸார் அவர்களை பெற்றோர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்துள்ளனர். (05)

## சீதுவையில் ரயில்மோதி பெண் ஒருவர் உயிரிழப்பு

*சீதுவை பிரதேசத்தில் கொழும்பில் இருந்து நீர்கொழும்பு நோக்கி பயணித்த ரயில் ஒன்றில் வெள்ளிக்கிழமை மாலை பெண் ஒருவர் மோதி உயிரிழந்துள்ளார்.*

*சீதுவை பிரதேசத்தின் லியனகேமுல்லை பகுதியை சேர்ந்த 50 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.*

*இந்த விபத்து தொடர்பில் சீதுவை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)*

## துப்பாக்கி சூட்டுக்குள்ளாகி உயிருக்கு போராடும் யானையைக் காவல் காக்கின்றது குட்டி யானை

வெலிகந்தை பொலிஸ் பிரிவிலுள்ள மைத்திரிகம பிரதேசத்தில் யானை ஒன்று இனம் தெரியாதோரின் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்த சம்பவம் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில், பலத்த காயங்களுடன் உயிருக்கு போராடிக் கொண்டிருக்கும் நிலையில் தாய் யானையை குட்டியானை அருகில் இருந்து காவல் காத்து வருகின்றது.

சம்பவதினமான வெள்ளி இரவு யானை மீது இனம் தெரியாதோரின் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் அந்த பகுதியில் நிலத்தில் வீழ்ந்து உயிருக்கு போராடிவருகின்றது.

வனவிலங்கு உத்தியோகத்தர் செல்ல முற்பட்டபோது குட்டி யானை அங்கு எவரையும் செல்லவிடாது காவல் காத்துவருகின்றது. (05)



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தேர்தல் முறைச் சிக்கல்

தற்போது நடைமுறையில் உள்ள விகிதாசாரத் தேர்தல் முறையில் மாற்றங்களைக் கொண்டுவர தமது தமிழ் முற்போக்குக் கூட்டணி ஒருபோதும் அனுமதிக்காது என்று அந்தக் கட்சியின் தலைவர் மனோ கணேசன் நேற்று யாழ்ப்பாணத்தில் தெரிவித்திருக்கிறார். தமிழ், முஸ்லிம் கட்சிகளும், தென்னிலங்கையில் உள்ள சிறிய கட்சிகளும் விகிதாசார முறைமையை நீக்குவதற்கு இடமளிக்கக்கூடாது என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தல் முறைமை சம்பந்தமான அனைத்து அம்சங்களையும் ஆராய வேண்டும் என்று குறிப்பிட்டு ஒன்பது பேர் கொண்ட குழுவொன்றை நியமித்து வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளமை குறித்துக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார். இது ஒன்று அவரது கட்சியின் புதிய நிலைப்பாடு அல்ல. நீண்ட காலமாகவே அவரது கட்சி இந்த நிலைப்பாட்டையே கொண்டுள்ளது. அதற்காகவே வாதாடியும் வருகின்றது.

மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டபோதும் தமிழ் முற்போக்குக் கூட்டணி இதே நிலைப்பாட்டையே கொண்டிருந்தது. இதனால் தேர்தல் சீர் திருத்தம் தொடர்பில் இணக்கப்பாடு எட்டப்படவில்லை என்பதைக் காரணம் காட்டி மாகாண சபைத் தேர்தல்களைத் தொடர்ந்து ஒத்திவைப்பதற்கான காரணமாக ரணில் இதனைப் பயன்படுத்திக்கொண்டார்.

இருக்கக் கூடிய தேர்தல் முறைகளிலேயே விகிதாசாரத் தேர்தல் முறைமைதான் சிறிய கட்சிகளுக்கும் தமிழ், முஸ்லிம் கட்சிகளுக்கும் அதிக நன்மையளிக்கக்கூடியது என்று அவர் நம்புகிறார். குறிப்பாக சிங்களவர்களுக்கு மத்தியில் மிகச் சிறிய எண்ணிக்கையில் தமிழர்கள் அல்லது முஸ்லிம்கள் வாழக்கூடிய பகுதிகளில் தமிழர்கள் அல்லது முஸ்லிம்கள் மக்கள் பிரதிநிதித்துவத்தைப் பெறுவதானால் அதற்கு விகிதாசாரத் தேர்தல் முறைமை மட்டுமே உதவும் என்பது அவரது கருத்து.

பிரதிநிதித்துவத் தேர்தல் முறைமையை நீக்கிவிட்டால் மலையகம், கொழும்பு உட்பட தெற்கின் பல இடங்களிலும் தமிழ், முஸ்லிம் மக்களுக்குப் பிரதிநிதித்துவம் இல்லாமல் போய்விடும் என்கிற அச்சமே அதற்கான காரணம். அது நியாயமானதும்கூட, நேரடிப் பிரதிநித்துவ முறை அதாவது பெரும்பான்மை வாக்குகளால் நேரடியாக பிரதிநிதியைத் தேர்வு செய்யும் முறையால் இப்போது தமிழ், முஸ்லிம்களுக்குக் கிடைக்கும் பல மக்கள் பிரதிநித்துவங்கள் இழக்கப்படும் நிலை ஏற்படும் என்பது உண்மை. அதனால்தான் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் இவை இரண்டையும் கலந்து ஒரு கலப்புத் தேர்தல் முறை உருவாக்கப்பட்டது. ஆனால், அது சபைகளில் தீர்க்கமான ஆட்சியை ஏற்படுத்துவதற்குப் பதில், தொங்கு நிலை ஆட்சிகளையே ஏற்படுத்தியிருந்தது என்பதும் கவனத்தில் எடுக்கப்படவேண்டியதாக இருக்கிறது.

அதே நிலைமை மாகாண சபையிலும் நாடாளுமன்றத்திலும் ஏற்பட்டால் நிலமை மேலும் மோசமாகக்கூடும் என்பதும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய வாதமே. அதனால் இந்த விடயத்தில் அரசியல் கட்சிகள் கலந்துரையாடி விரைவான ஒரு முடிவுக்கு வரவேண்டியது அவசியம். அப்படியிருந்தால், அதனைக் காரணம் காட்டியே ரணில் விக்கிரமசிங்க மீண்டும் தேர்தல்களைப் பிற்போட்டு விடுவார். 2015 முதல் மாகாண சபைத் தேர்தல்களை நடத்தாமல் இருந்ததற்கு அவர் இதனையே காரணமாகக் காட்டிவந்தார் என்பது மறக்கமுடியாதது. மீண்டும் அதுபோன்ற ஒரு துன்பம் நிகழ்வதற்கு அனுமதிக்கக்கூடாது. எனவே இது விடயத்தில் அனைத்துக் கட்சிகளும் கலந்துரையாடி, குறிப்பாக தமிழ் முஸ்லிம் கட்சிகள் சேர்ந்து கலந்துரையாடி அறிவியல் ரீதியில் ஆராய்ந்து எமக்கு அதிக நம்மையளிக்கக்கூடிய தேர்தல் முறையை அவசரமாகத் தேர்வு செய்வது கட்டாயம்.



## மீண்டும் பாலஸ்தீன இடப்பெயர்வு; தரைமட்டமான காசா மருத்துவமனை

ஐங்கரன் விக்கினேஸ்வரா



காசாவில் உள்ள அனைத்து பலஸ்தீனியர்களும் 24 மணி நேரத்திற்குள் வடக்கு காசாவை காலி செய்ய வேண்டும் என்று இஸ்ரேல் கடந்த வாரம் உத்தரவிட்டது. இந்த அறிவிப்பால் சுமார் 1.1 மில்லி யன் மக்கள் கட்டாய இடப்பெயர்வை நோக்கித் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த உத்தரவின் பின்னர், காசா மருத்துவமனை படுகொலையால் உலகே அதிர்ச்சி அடைந்துள்ளது. உலக போர் விதிகளின்படி, எத்தகைய போர் என்றாலும் மருத்துவமனைகளில் மீது தாக்குதல் நடத்தப்படக்கூடாது. காயப்பட்டவரகள் மட்டுமின்றி அப்பாவி மக்களும் மருத்துவமனைகளில் தஞ்சம் புகு-வார்கள். இதனால் ஒருபோதும் மருத்துவமனைகள் தாக்குதல் நடத்தப்படக்கூடாது என்பதை பன்னாட்டு விதியுமாகும்.

### நொடிகளில் தரைமட்டமான காசா மருத்துவமனை

இதனை மீறி, இஸ்ரேல் காசாவில் இருந்த பொது மருத்துவமனையில் தாக்குதல் நடத்தியது பெரும் போர்க் குற்றம் என்றே கருதப்படுகிறது. மேற்கத்தய ஊடகங்கள் ஹமாஸ் மேற்கொண்ட தாக்குதல் காரணமாகவே இந்த உயிரிழப்புகள் இடம்பெற்றன என்றும், பின்னர் இஸ்லாமிய ஜிகாத்தின் ரொக்கட் தவறுதலாக வெடித்ததால் இந்த இழப்புகள் ஏற்பட்டுள்ளது என பொய்ப் பரப்புரைகளை மேற்கொள்கின்றன.

**(இஸ்ரேலின் போர்கள் அனைத்தும் அடர்த்தியாக அடைக்கப்பட்டு இருக்கும் இம் மக்களின் மீதே நடத்தப்படுகின்றன. காசா மருத்துவமனை படுகொலையால் உலகே அதிர்ச்சி அடைந்துள்ளது)**



அவர்கள் சொல்வதைப் போலன்றி, இந்த அழிவின் அளவு ரொக்கட் தாக்குதலால் ஏற்பட்டது எனக் கருதமுடியாத அளவிற்கு காணப்படுகின்றது. அல்ஜசீரா வெளியிட்டுள்ள வீடியோக்கள் மருத்துவமனையின் பல மாடிக் கட்டடங்கள் தீப்பற்றி எரிவதை காண்பித்துள்ளன. உடல்கள் சிதறி, பெருமளவு குருது சிந்தியுள்ளதை இடிபாடுகள் இடையே காணமுடிகின்றது.

இஸ்ரேல் பொதுமக்கள் குடியிருப்புகள் மீது மேற்கொண்டு வரும் தாக்குதல்களால் மருத்துவமனை பாதுகாப்பான இடம் எனக் கருதி அங்கு தஞ்சமடைந்த பல பொதுமக்களும் காணப்பட்டனர். மருத்துவமனையில் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது பெரும் சத்தம் கேட்டது கூரை இடிந்து சத்திரசிகிச்சை இடம் பெற்றுக்கொண்டிருந்த அறையின் மீது விழத்தொடங்கியது. இது படுகொலை என வைத்தியர் ஹசன் அபு சிட்டா தெரிவித்தார்.

### இஸ்ரேல் பொய்யும் மறுப்பும்

காசா மருத்துவமனையில் நோயாளிகள் சுகாதார பணியாளர்கள் அங்கு தஞ்சமடைந்திருந்த மக்கள் மீதான இந்த அதிர்ச்சி தரும் தாக்குதலை எவற்றாலும் நியாயப்படுத்த முடியாது எனக் குறிப்பிட்டுள்ள மருத்துவமனை வைத்தியர் ஹசன் அபு சிட்டா இது ஒரு இலக்கல்ல இந்தக் குருதிச் சகதி நிறுத்தப்படவேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

இந்த மருத்துவமனை யில் ஏற்கனவே ஏனைய காயங்களால் காயமடைந்த பெருமளவானவர்களும் காணப்பட்டனர். தற்போது காயமடைந்த மக்கள் தரையில் வலியில் கதறுகின்றனர்.

### காசா மக்களின் இரண்டாவது இடப்பெயர்வும் பேரழிவும்

தற்போது நடப்பவை 1948 போரை நினைவூட்டுவதாக காசா மக்கள் வேதனை அடைந்துள்ளனர். 1948ஆம் ஆண்டு பலஸ்தீனத்தில் இருந்து இஸ்ரேல் தனி நாடாக உருவானது. அதன் நீட்சியாக இஸ்ரேலுக்கும், அரபு நாடுகளுக்கும் இடையே போர் வெடித்தது.

கிட்டத்தட்ட ஓர் ஆண்டு நீடித்த இந்த போரின் போது 500 பலஸ்தீன கிராமங்கள், நகரங்களை இஸ்ரேல் அழித்தது. 1948 பலஸ்தீன பகுதிகளிருந்து ஏறத்தாழ 7 லட்சத்து 50 ஆயிரம் மக்கள் கட்டாய இடப்பெயர்வுக்கு தள்ளப்பட்டனர். அதன் பின்னர் அவர்களால் தங்களின் பகுதிக்குத் திரும்பவே முடியவில்லை.

அப்படி இடம் பெயர்ந்தவர்களின் வாரிசுகள்தான் தற்போது காசாவில் போர் சூழலை எதிர்கொண்டு வருகின்றனர். 1948 போரின்போது கட்டாய இடப்பெயர்வுக்குத் தள்ளப்பட்ட நிகழ்வை பலஸ்தீனர்கள் 'நக்பா' (பேரழிவு) என அழைக்கிறார்கள். ஆக்கிரமிப்பாளர்கள் ஒன்றைப் புரிந்துகொள்ளவேண்டும். இதுதான் எங்கள் நிலம். இங்கேதான் எங்களின் வேர்கள் இருக்கும். சுதந்திரம், அமைதி, பாதுகாப்புக்காக நாங்கள் தொடர்ந்து போராடுவேம் என பாலஸ்தீன மக்கள் உறுதிபூண்டுள்ளனர்.

1880-90களில் 15,000 எண்ணிக்கையில் இருந்த யூதர்கள் அடுத்த 30 ஆண்டுகளில் ஒட்டுமொத்த பாலஸ்தீன மக்கள் தொகையில் 6 சதவிகிதமாக மாறியுள்ளனர். இன்று பாலஸ்தீனத்தில் 79 சதவிகிதம் இஸ்ரேலியர்கள் வாழ்கின்றனர். 1948க்கு பிறகு 600க்கும் மேற்பட்ட இஸ்ரேலிய நகராட்சிகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

### திறந்தவெளி சிறை வாழ்க்கை

பலஸ்தீனத்தில் 2006க்கு பிறகு, இஸ்ரேலால் பெரும் சுற்றுச்சுவர் எழுப்பப்பட்டு ராணுவக் காவலுடன் இந்த

(5ஆம் பக்கம் பார்க்க..)

# மீண்டும் பாலஸ்தீன இடப்பெயர்வு............

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)இரண்டு மக்கள் பகுதிகளும் சிறை வைக்கப்பட்டிருக்கின்றன. காசாவில், சுமார் 23 லட்சம் மக்கள் மிகக் குறுகிய நிலப்பகுதியில், திறந்த வெளி சிறையில் அடைக்கப்பட்டு இருக்கின்றனர்.

இஸ்ரேலின் போர்கள் அனைத்தும் அடர்த்தியாக அடைக்கப்பட்டு இருக்கும் இம்மக்களின் மீதே நடத்தப்படுகின்றன. மேலும், பலஸ்தீனத்தின் தரை, வான் மற்றும் கடல்வழி எல்லைகள் அனைத்தும் இஸ்ரேலின் ராணுவத்தால் பாதுகாக்கப்பட்ட ஒன்றாக மாற்றப்பட்டிருக்கிறது.

இதனால், காசாவிற்கான உணவு, குடிநீர், மின்சாரம், மருத்துவ உதவிகள் ஆகிய அனைத்தும் இஸ்ரேலின் கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றன. போரின்போது அத்தியாவசிய சேவைகள் அனைத்தும் முற்றும் முழுவதுமாக தடுத்து நிறுத்தப்படும்.

### மே15 பாலஸ்தீன இனச் சுத்திகரிப்பு நாள்

ஒவ்வொரு ஆண்டும் மே 15 அன்று உலகெங்கிலும் உள்ள பாலஸ்தீனியர்கள் நக்பா (பேரழிவு) தினத்தை நினைவு கூருகின்றனர். இது 1948 இல் பலஸ்தீனத்தின் இனச் சுத்திகரிப்பு இடம்பெற்ற தினமாகும்.

இதுவே முதல் அரபு-இஸ்ரேல் போரைத் தூண்டியது. சியோனிச இராணுவப் படைகள் குறைந்தது 750,000 பலஸ்தீனியர்களை அவர்களது வீடுகள் மற்றும் நிலங்களில் இருந்து வெளியேற்றியது. அன்று முதல் பலஸ்தீனத்தின் 78 வீதத்தைக் கைப்பற்றின. மீதமுள்ள 22 வீதம், இப்போது ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரை மற்றும் முற்றுகையிடப்பட்ட காசா பகுதி எனப் பிரிக்கப்பட்டது. இன்றும் அண்டை நாடுகளில் உள்ள குறைந்தது 58 முகாம்களில் சுமார் ஆறு மில்லியன் பதிவு செய்யப்பட்ட பலஸ்தீனிய அகதிகள் வாழ்கின்றனர்.

### உலக நாடுகளும், ஐநாவும் கடும் கண்டனம்

காசா மருத்துவமனை மீதான தாக்குதலில் அந்த இடம் தரைமட்டமாகி அப்பாவி மக்கள் உயிரிழந்த கொடூரத்தை இஸ்ரேல் மறுத்தாலும், உலக நாடுகள் கண்டனத்தை தெரிவித்துள்ளன. இஸ்ரேலுக்கு அமெரிக்க அதிபர் ஜோ பிடன் வந்திருந்த நிலையில், இந்த தாக்குதல் காசா பிராந்தியத்தில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தி உள்ளது. மருத்துவமனை மீதான தாக்குத லுக்கு அரபு நாடுகளும், ஐநாவும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

இஸ்ரேல்-பலஸ்தீன மோதலில் இந்த மருத்துவமனை மீது நடந்த தாக்குதலில் குறைந்தது 500 பேர் உயிரிழந்துவிட்டதாக காசா சுகாதாரத்துறை அறிவித்துள்ளது. இந்த வான் தாக்குதலுக்கு இஸ்ரேல்தான் காரணம் என காசா குற்றம் சாட்டியுள்ளது.



### காசாவின் மருத்துவப் பிரிவு செயல் இழக்கிறது

அடுத்த சில நாட்களில் காசாவின் மருத்துவப் பிரிவு செயல் இழக்கும் எனவும், கொல்லப்பட்டவர்கள் அனைவரும் பொதுமக்கள் என்பதால் இந்தத் தாக்குதல் மிக மோசமான கொடூரமாகும். அப்பாவி மக்கள் தங்கள் வீடுகளில் இருந்து தப்பியோடி பாதுகாப்பான இடம் எனத் தாங்கள் கருதிய இடத்தில் தஞ்சமடைந்திருந்தனர்-மருத்துவனையில் சர்வதேச சட்டங்களின் கீழ் அது பாதுகாப்பான இடம் எனவும் மருத்துவமனையின் இயக்குநர் வைத்தியர் சியாட் செகாடா அல்ஜசீராவிற்கு தெரிவித்துள்ளார். மிருகத்தனமான படுகொலை என்றும் சர்வதேச விதிகளை இஸ்ரேல் அப்பட்டமாக மீறியுள்ளதாக பாலஸ்தீன அதிபர் அப்பாஸ் தெரிவித்துள்ளார். ஜோர்டானில் இருந்த நிலையில், இந்த கொடூர தாக்குதல் குறித்த தகவல் கிடைத்தவுடன் அவர் மேற்கு கரைக்குத் திரும்பினார். அமெரிக்க அதிபருடன் நடக்கவிருந்த சந்திப்பை ரத்து செய்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே இந்தத் தாக்குதலுக்கு அரபு நாடுகள் உட்பட உலகின் பல்வேறு நாடுகளும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

### மிருகத்தனமான தாக்குதல்

இஸ்ரேல் தாக்குதலை 'போர் குற்றம், இனப்படுகொலை' என்று குறிப்பிட்டு ஓமன் அரசும் கண்டனம் தெரிவித்துள்ளது. இஸ்ரேலின் இந்த கொடூர தாக்குதல்களை மேற்குலக நாடுகள் உடனடியாக தடுக்க வேண்டும் என அரபு லீக் தலைவர் அஹ்மத் அபுல் கெயிட் வலியுறுத்தியுள்ளார். அதேபோல ஜோர்டான், எகிப்து, துருக்கி உள்ளிட்ட பல்வேறு அரபு நாடுகளும் இஸ்ரேலின் இந்தத் தாக்குதலுக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

காசா மருத்துவமனை மீதான தாக்குதலுக்குக் கண்டனம் தெரிவித்துள்ள பாகிஸ்தான், கடந்த சில நாட்களாக இஸ்ரேல் நடத்தி வரும் கொடூர தாக்குதலுக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் எனச் சர்வதேச சமூகத்தைக் கேட்டுக் கொள்வதாகத் தெரிவித்துள்ளது. அதேபோல யுனிசெப் அமைப்பும் இந்தத் தாக்குதலுக்குக் கண்டனம் தெரிவித்துள்ள நிலையில், காசா பகுதியில் உள்ள குழந்தைகளைப் பாதுகாக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளது.

பாலஸ்தீனத்தின் காசா அல்-அஹ்லி மருத்துவமனை மீது இஸ்ரேல் நடத்திய மிலேச்சத்தனமான தாக்குதலில் மருத்துவமனையில் தஞ்சமடைந்திருந்த 500க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்ட

துயர சம்பவத்திற்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில் பலஸ்தீன அரசு 3 நாட்கள் துக்க தினமாக அறிவித்துள்ளது.

காசா பகுதியிலிருந்து மக்கள் வெளியேற கால அவகாசம் கொடுக்கப்பட்டிருந்த நிலையில் இஸ்ரேல் விமான படை பலஸ்தீன் மக்களை குறிவைத்து தாக்குதல் நடத்தியுள்ளது.

இஸ்ரேலின் இந்த அதிபயங்கர தாக்குதலுக்கு பாலஸ்தீனம், எகிப்து உள்ளிட்ட நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. தற்போது இஸ்ரேலின் இக்கொடூர தாக்குதலைக் கண்டித்து பலஸ்தீனத்தின் மேற்கு கரையில் கண்டனப் போராட்டங்கள் வெடித்துள்ளன.

2007 இல் ஹமாஸ் அமைப்பினர் காசா ஆட்சியை கைப்பற்றிய பின்னர் ஹமாசிற்கும் இஸ்ரேலிற்கும் இடையில் இடம்பெற்றுவரும் மோதல்களில் ஒரே நாளில் மிக அதிகளவானவர்கள் கொல்லப்பட்ட கோரமான சம்பவமாக இது விளங்குகின்றது



காலைக்கதிர் Kalaikkathir





# அகமுறையும் ஆன்மீக ஆனந்தப் பெருவிழா நவராத்திரி

**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
*மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்*
*மெல்பேண், ஆஸ்திரேலியா.*

ஒன்பது என்பது எண்களிலும் முக்கிய மானது. ஜோதிடங்களிலும் முக்கியமா னது.எண்கணித ஜோதிடத் திலும் இன்றிய மையாததாய் இருக்கிறது.இந்த ஒன்பதை நவ என்னும் பெயரினைக் கொடுத்து இராத்தி ரியுடன் இணைத்து நவராத்திரி என்றும் அழைக்கின்றோம்.நவராத்திரி என்றாலே ஒன்பது இரவுகள் என்பதையும் எல்லோரும் அறிவோம். நவ - என்றால் இன்னுமொரு கருத்தும் இருக்கிறது. அதாவது புதுமை என்பதையும் கருத்திருத்த வேண்டும். நவநாகரிகம் என்று - புதிய அம்சங்களுடன் வந்தமைந்த நாகரித்தைப் பெயரிட்டு அழைக்கிறோம் என்பதையும் யாவரும் அறிவோம்.புதுமைகள் பல வாழ்வில் தொடர்ந்து வரவேண்டும் என் னும் எண்ணத்தினால் தான் வருடந்தோறும் நவராத்திரியினைப் பக்தி பூர்வமாக அனுஷ்டித்து வருகிறோம் என்றும் எண்ணிடத் வைக்கிறதல்லவா !

நவராத்திரி என்றவுடன் பெண்மைதான் முன்னே வந்து நிற்கும். பெண்மை என்றதும் அங்கு தலைமை தாங்குவது தாய்மைதானே! தாயினைத் தெய்வமாக வணங்கும் முறை தொன்று தொட்டு சமூகத்தில் இருந்து வருகிறது என்பதை வரலாற்றால் அறிந்து கொள்ளுகிறோம்.எம்மைப் படைத்த ஆண்டவனையே அம்மையே என்றுதான் அழைத்து ஆராதிக்கின்றோம். மணிவாசகப் பெருமானே அம்மையே அப்பா ஒப்பிலாமணியே அன்பினில் விளை ந்த ஆரமுதே என்று தாயினையே முன்னிறுத்தி அந்தப் பரம்பொருளை விழிக்கின்றார். தாயினும் நல்ல தலைவர் என்றடியார் என்றும், தாயும் நீயே தந்தையும் நீயே என்றும். சம்பந்தப் பெருமானும் தாயினை முன்னிறுத்திப் பாடுவதும் நோக்கத்தக்கதே.தமிழ் மூதாட்டி எத்தனையோ அறிவுரைகள் பகர்ந்தவர். அவர்கூட கொன்றைவேந்தனை ஆரம்பிக்கும் வேளை அன்னையும் என்றுதான் முதலடியாகக் கொண்டு ஆரம்பிக்கிறார்.

நாம் வாழும் பூமியைய் தாய் என்கின்றோம். வாழ்வினுக்குஅவசியமானபொறுமையைத் தாய் என்கின் றோம். அனைவரின் அகத்திலும் அமரவேண்டிய கருணையையும் தாய் என்றுதான் சொல்லுகிறோம். ஓடுகின்ற ஆறுகளுக்கும் தாய்மையைக் கொண்ட பெண்களின் பெயர்களையே சூட்டி பெருமைப்ப டுத்துகிறோம் அல்லவா !

உலகிலே யாவராலும் மதிக்கப்படுவதும், புனிதமாய் கருதப்படுவதும் என்ன வென்று பார்க்குமிடத்து அஃது தாய்மையாய்த்தான் மலர்ந்திருக்கிறது எனலாம். தாய்மைக்கு ஈடாக எதுவுமே இருக்கிறதா என்றால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். எனவேதான் தாய்மையை வழிபாட்டு நிலைக்கு எங்கள் முன் னோர்கள் உயர்த்தினார்கள் எனலாம். அந்தத் தாய்மையினை நவராத்திரியுடன் இணைத்து - ஒன்பது இரவுகளையுமே தாய்த் தெய்வ வழிபாடாக எங்களின் முன்னோர்கள் அமைத்து விட்டார்கள். பெண்மை என்றாலே பெருஞ்சக்திஎன்றுதான்போற்றப்படுகிறது. அந்த வகையில் பெருஞ்சக்தியாக உருவெடுக்கும் தெய்வத்துக்கு ஒப்பிட்டுத்தான் சக்தி வழிபாடு என்பதே தொடங்கி இருக்கலாம் என்று கருதமுடிகிறதல் லவா ! அகிலத்தின் இயக்கத்துக்கு அந்தச்சக்தியே முதன்மையாய் இருக்கிறது அல்லவா ! அப்படிப்பட்ட சக்தியானது இல்லாவிட்டால் இந்த அகிலத்தின் இயக்கமே அற்றுவிடும் அல்லவா? இந்த அடிப்படையில் சக்தியை மையமாகக் கொண்டு ஏற்படுத்தப்பட்டதே பக்தி பூர்வமான நவராத்திரி விழாவாகும்.

சிவ என்றால் ஏகன் என்பதே அர்த்தமாகும். ஏகம் என்றால் ஒன்று என்றுதானே பொருள்.அதனால்த்தான் சிவனுக்கு உரிய ராத்திரியான சிவராத்திரியை ஒன்றாக் கினார்களோ தெரியவில்லை. நவ என்றால் ஒன்பது. நவசக்திகளைக் குறிக்க நவராத்திரியை ஏற்படுத்தியும் இருக்கலாம் அல்லவா ! சக்தி பெரிதா சிவன் பெரிதா என்று எடுத்து வீண் வாதம் மட்டும் செய்து விடவே கூடாது. சக்தி இல்லையேல் சிவம் இல்லை.சிவம் இல்லையேல் சக்தியும் இல்லையே என்றாகிவிடும். இரண் டுமே பிரிக்க முடியா நிலையாகும். இதனால்த்

தான் மன்னுயிர்கள் சாரத் தருஞ் சக்தி - பின்னமிலான் எங்கள் பிரான் என்று திருவருட்பயன் காட்டி நிற்கிறது.

வடக்கேகாஷ்மீர்தொடக்கம்தெற்கேகன்யா குமரிவரை , மேற்கே பாஞ்சால த்திலிருந்து கிழக்கே பர்மாவரை , ஈழத்தில் பல பகுதிகளிலும் நவராத்திரி கொண்டாடப்படுகிறது. சைவர், வைணவர், சாக்தர், காணாபத்தியர், என்று எல்லா மதத்தவர்களுமே நவராத்திரியை அனுஷ்டிக்கிறார்கள் என்பதும் நோக்கத்தக்க தேயாகும். நவ ராத்திரி எப்பொழு ஆரம்பிக்கப்பட்டது என்று பார்க்கும் பொழுது - பாரத காலம், இராமாயண காலம் என்று நீண்ட காலமாகவே நவராத்திரி கைக்கொள்ளப்பட்டு வந்திருக்கிறது என்றுதான் அறிய முடிகிறது.

**நவராத்திரி சிறப்பம்சம்**

நவராத்திரி என்பது சக்தியை மையப் படுத்திய பூஜையாக இருப்பதால் - இதனைப் பல பெயரில் அழைத்து அனுஷ்டித்து வருவதும் நோக்கத்தக்கது. அம்பாள் எனக் காஷ்மீரிலும், பவானி என ராஜஸ்தானி-லும், கல்யாணி என கூர்ஜரத்திலும், உமையென்று மிதிலைப்பகுதியிலும், அழைத்துப் போற்றிப் பரவுகின்றனர்.இதனை விடவும் - மீனாட்சி, காமாட்சி, சாமுண்டி, சரஸ்வதி, துர்க்கை, பகவதி என்றும் பெயரிட்டு சக்தியை போற்றி வருவதையும் காணக்கூடியதாகவும் இருக்கிறது.

சக்தியினைப் பரவி நிற்கும் நவராத்திரி என்பது ஒன்றல்ல. நவராத்திரி என்பது வருத்தில் நான்கு முறை வருகிறது. மஹா நவராத்திரி என்னும் பெயருடன் தையில் வருகிறது. வஸந்த நவராத்திரி என்பது பங்குனியில் வரு கிறது, ஆனியில் வருவது ஆட நவராத்திரியாய் அமைகிறது. , புரட்டா-சியில் வருவது சாரதா நவராத்திரி. இந்த சாரதா நவராத்திரியைத்தான் இந்தியா தொடக்கம் ஈழம்வரை சிறப்பாகக் கொண்டாடி வருகிறார்கள்.இந்தியாவின் வடபகுதியில் 'தசரா என்னும் பெயருடன் கலைமகளின் விழா அமைகிறது. நாங்கள் நவராத்திரி விழா வாக எடுக்கின்றோம்.நவராத்திரியின் நிறைவினை விஜயதசமி என்று அழைக்கிறோம்.விஜயதசமியையும் உள்ளடக்கியே வடக்கில் தசரா என்றார்களோ என்றும் கருதக்கூடிய தாக இருக்கிறாதல்லவா !

நவம் என்றால் ஒன்பது எண்ணிக்கை என்று பார்த்தோம். அது எண்ணிக்கை மட்டுமல்ல - புத்துணர்ச்சி என்னும் கருத்தையும் தாங்கியே நிற்கிறது. கலைகளைப் போற்றி நின்று கொண்டாடும் வழிபாட்டு விழாவாக நவராத்திரி அமைகிறது எனலாம். கலைகளை முன்னிறுத்தி அனுஷ்டிக்கும் பொழுது அங்கு புத்துணர்வு மேலிடுவது இயல்பான ஒன்றல்லவா? இதனால் நவராத்திரி புத்துணர்வினை நல்கி புதுத்தெம்பு பெருகி வாழ்வில் மகிழ்வினை நல்கிட உதவும் விரதமாய் , கொண்டாட்டமாய் அமைகிறது என்றும் எடுத்துக் கொள்ளலாம்.

எங்களின் சமயம் எங்கள் வாழ்வுடன் இணைந்தே வருகிறது. ஆனபடியால் தான் வளர்ந்து கொண்டே வருகிறந்து. தளர்வுண்டு போகாதிருப்பதற்குக் காரணம் அதன் தொடர் நிலை என்று தான் என்ண முடிகிறது. அப்படித் தொடர்வதற்குக் காரணம் - நாங்கள் சமயத்தை வாழ்வியல் ஆக்கிக் கொண்டதே முக்கிய நிலை எனலாம். கடவுளையே உறவு முறையில் அழைத்து கடவுளுக்கே குடும்பமும் வைத்து வாழ்வி-யயோடு இணைத்து நிற்கும் சமயத்தை உலகில் எங்குமே காணமுடியாது. அதனால் வாழ்வுக்கு வாழ்வியலுக்கு எவை எல்லாம் இன்றியமையாதனவோ அவற்றையெல்லாம் இறையுடன் இணைத்து அவற்றுக்கு பெருமையும் பெறுமதியும் காட்டி நிற்பதுதான் எங்கள் சமயத்தின்உன்னதம் எனலாம்.கர்த்தர் , கருணாநிதி, பிதா , பிள்ளை, அண்ணல், அரும்பொருள், நாயகன், நடுநிலையாளன், மாண் புடையான், மெய்ப் பொருளானவன் , தலைவன், தோழன்,என்றெல்லாம் அன்பு பாராட்டி அழைக்கின்றார் அந் தப் பரம்பொருளை. ஆனால் இவை எல்லாவற்றுக்கும் மேலாக தாய் என்று அழைப் பதே சிறப்புடையதாகும் என்று தவசிரேஷ்டர்கள் எண்ணுகிறார்கள்.



தாயிடத்துப் பிள்ளை உரிமையுடன் எதையுமே கேட்கும் நிலை இருக்கிறது. தாயான சக்தியிடம். வாழ் வினில் செம்மையாக வாழ எவையெல்லாம் எமக்குத் தேவை என்பதைத் காட்டி நிற்பதுதற்கு நவராத்திரி எல்லோருக்கும் வரமாய் வாய் த்திருக்கிறது எனலாம்.

நல்லநலம் வேண்டும். இவ்வுலகில் வாழுதற்கு நல்லவளம் வேண்டும். நலமும் வளமும் வாய்த்துவிடுவது மட்டும் முக்கியமல்ல. அத்துடன் தெளிவும் வரவேண்டும். நலமென்னும் என்னும் பொழுது வீரமாகிறது. வளம் என்னும் பொழுது செல்வம் ஆகிறது. தெளிவென்னும் பொழுது கல்வி வந்து அமைகிறது தெளிவைத்தரும் கல்வியையும், வளத்தைத்தரும் செல்வத்தையும், நலத் தைத்தரும் வீரத்தையும் தந்தருளவாய் தாயே என்று மனமுருக வேண்டிப் பிரார் த்தித்து நிற்பதுதான் நவராத்திரியாய் வந்து அமைகிறது. வீரத்துடனும் , செல்வத் துடனும் அறிவு அதாவது கல்வியானது இணைய வேண்டும். அப்படி இணைந்தால் த்தால் வீரமும் செல்வமும் ஒழுங்கான முறையில் பயனை அளிக்கும். அப்படி அமையும் பொழுது அங்கே வெற்றி என்னும் வெளி ச்சம் பிரகாசமாய் வந்து நிற்கும். இதுதான் உண்மை. இதுதான் நிச்சயம். இதனை உணர்த்துவதாய் அமைவதுதான் நவராத்திரி. இந்த வெற்றியையே உணர்த்தி நிற்பதைத்தான் விஜயதசமி என்று கொண்டாடி மகிழ்கிறோம்..

சக்தியின் வடிவங்கள் பற்பல.எந்தத் தேவைக்கு என்ன சக்தி தேவையோ அந்தச் சக்தியாய் - தாயாய் விளங்கும் ஆதி சக்தி வந்து நிற்பாள்.நாட்டின் ஆட்சி அதிகாரத்தை நடத்தும் மந்திரிசபையில் பாதுகாப்பு, கல்வி, நிதி என்பதை நடத்துவதற் கென்று இருபது போல்- ஆதி சக்தியானவளும் உலக இயக்கத்துக்கு இன்றியமையமையாதனவாகிய வீரம் , செல்வம், கல்விக்கும் பொறுப்பான சக்தியாய் வரு வதை நவராத்திரி விளக்கி நிற்கிறது எனலாம். துர்க்கை எனும் சக்தி வீரத்துக்கும், இலக்குமி எனும் சக்தி செல்வத்துக்கும், சரஸ்வதி எனும் சக்தி கல்விக் குமாய் அமைந்திருக்கிரது என்பது நோக்கத்தக்கதாகும்.

தாய்மை என்பதைப் பெண்மையில் தான் காணலாம். பெண்மை என்றால் மென்மை என்றும் பொருள் இருக்கிறது. அந்த மென்மைக்குள்ளே பொறுமையும் இருக்கிறது.மோலோங்கும் சினமும் இருக்கிறது. பெண் மை அடங்கி நிற்கும் பொழுதுஅங்கு மென்மைமேலோங்கும்.அதே பெண்மை பொங்கிடும் வேளை யாவுமே பொசுங்கிவிடும் வெம்மையே வெளிப்பட்டு நிற்கும்.பெண்மையினை மென்மையாய்த்தான் அணுகவேண்டும். சக்திகளாய் அமைகின்ற -மலை மகளையும், அலைமகளையும், கலைமகளையும், அன்புடன் அணுகினால் வாழ்வினிலே நலமும் வரும், வளமும் வரும் , நல்ல தெளிவும் வரும்.

நல்நலமும் , நல்வளமும், நல்லறிவும், ஒன்றாக இணையும் பொழுதுதான் வாழ்க்கையென்பது பூரணமா கிறுது. இதில் ஒன்று குறைந்தாலும் அஃது நிறைவுடைய வாழ்வாக அமையவே மாட்டாது.இவை மூன்றையும் பெற்றிட மனம் மொழி மெய்களால் உருக வேண்டும்.நம்மை மறந்து சலனமற்ற அந்தச் சக்தியிடம் சரணடைதல் வேண்டும்.கிடைத்த வளத்தை கீழாக்குவதோ பாழாக்குவதோபொருத்தமில்லாநிலையாகும்.

இறைவனைக் குறித்து உண்ணாமல் , உறங்காமல்,உயிருக்குவருகின்றஊறுகளைப் பாராமல், தவமிய ற்றி அதன் பயனாக வரத்தால் பல பெற்றிட்ட பலர்- கிடைத்தற்கரிய அத்தனையையும் , தங்களது ஆணவம் என்னும் அகந்தையினால் பொல்லாவழியில் செலுத்து - முடிவில் வரமும் போய் வாழ்வும் அழிந்ததை இதிகாசங்கள் , புராணங்கள் வாயிலாக அறிகின்றோம்.

(7ஆம் பக்கம் பார்க்க..)

காலைக்கதிர் Kalaikkathir

# அகமுறையும் ஆன்மீக ஆனந்தப் பெருவிழா நவராத்திரி.......

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

சுத்தம் என்னும் பதத்தின் முன் அகரம் வந்தால் அது அசுத்தம் ஆகி விடுகிறது. சுரர் என்னும் பதத்தின் முன் அகரம் வரும்பொழுது அசுரர் வந்துவிடுகிறார். சுத்தமாய் இருப்பவர் சுரர். அசுத்தமாய் இருப்பவர் அசுரர் என்றாகிவிடுகிறதல்லவா! நவராத்திரி பற்றிய சிந்தனையில் இஃது அவசியாமாஎன்றுஎண்ணிடத்தோன்றுகிறதா ? இறைவனிடம் வரம்பல பெறுவறுவதற்கு நீண்ட நாட்கள் ஏன் வருடக்கணக்கில் தவமி

யற்றி பெறுதற்கு அரிய பேறுகளை எல் லாம் பெற்றதன் பின்னர் - அத்தனையையும் அறமில்லா வழியில் செல்லவிட்டு , ஆண வத்தின் உச்சிக்கே சென்று, முடிவில் வர மும் இழந்து , வாழ்வும் முடிந்துபோன நிலையினைப் புராணங்கள் இதிகாசங்கள் காட்டுகின்றன.

சிவ பக்தனானா இராவணன், சிவனிடம் வரம் பெற்ற பத்மாசூரன், சிவனிடம் வரம் பெற்ற சூரபது மன், ஹம்சன், இரணியன், ம குடாசூரன் என்று இந்தவரிசை நீள்கிறது.வீரம் , செல்வம், கல்வி மூன்றும் வந் தாலும்- அங்கு அகந்தை மட்டும் வந்துவிடக்கூடாது. அறிவுடன் அதாவது நல்லறிவுடன் சேரும் வீரமும் , செல்வமுமே நிலைக்கும்.பயன் அளிக்கும்.பல்கியும் பெருகும்.மாறாக நடப்பின் அத்தனையும் பயனற்றே போய்விடும் என்பதை மனமிருத்த வேண்டும்.அந்த அருமையான தத்துவத்தைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் பக்திபூர்வமான நிலை தான் நவராத்திரி என்பதையும் அனைவருமே அகமிருத்துவது அவசியமாகும்.

நவராத்திரி என்பது விரதமா அல்லது கலைகளின் விழாவா என்று எண்ணும் பொழுது - விரதத்துடன் இணைந்த கலைவிழாவாகத்தான் நவராத்திரியைப் பார்க்கின்றோம். நவராத்திரி தொடங்கி விட்டாலே-ஆடலுக்கும், பாடலுக்கும் குறைவே இருக்காது. கலைஞர்கள் அனைவரும் சங்கமிக்கும் விழாவாக நவராத்திரி அமைவது அனைவருக்கும் பேரானந்தமாகும்.வீட்டிலும் பாட்டு.வெளியிலும் பாட்டு. கல்லூரிகள், கலாசாலைகள், பல்கலைக்கழகங்கள், தொழில்பார்க்கும் இடங்கள், யாவற்றிலும் நவராத்திரி மிகவும் சிறப்பாகக் கலை



விழாவாகவும், பக்தி பூர்வ மான சமய நிகழ்வாக அமை வதைக் காணக்கூடியதாக இருக்கும்.அதே வேளை அனைத்து ஆலயங்களிலுமே நவராத்திரி பக்திபூர்வ மாய் நடைபெறுவதையும் காணலாம்.

நவராத்திரி என்றதும் மனமெல்லாம் ஒருவித பூரிப்பே ஏற்படும்.ஏனென்றால் கலைகளின் விழாவாக இருப் பதால்.இந்த விழாவில் கொலு வைப்பது என்பது வீட்டிலும் இருக்கும்.ஆலயங்களிலும் இடம் பெறும். ' கொலு என்றால் அழகு என்பதுதான் அர்த்த மாகும்.கொலு என்பது ஆடம்பரத்துக்காக வைக்கப்படுவது அல்ல.கொலு வைப்பதி லும் அர்த்தங்கள் பொதிந்தே இருக்கின்றன என்பதையும் கருத்திருத்தல் அவசியமே யாகும்.

கொலுவைப்பதிலும் சில நடை முறைகள் வழக்கில் இருந்தே வருகின்றன. அதாவது ஒற்றைப் படையில் அமையுமாறுதான் கொலுவின் படிகளை அமைத்து வருகிறார்கள். ஆனால் அவரவர் வசதிக்கு ஏற்பவும் கொலு வினை வைத்து வருவதையும் காணமு- டிகிறது.ஒன்பது படிகளாக வைப்பதை விசே- டம் என்று கருதும் நிலையே பரவலாகக் காணப்படுகிறது.ஐம்பூதங்களில் ஒன்றான மண்ணாலாகிய பொம்மை களால் என்னைப் பூஜித்தால் , நான் பூஜிப்போருக்கு சகல சுகங்களையும், சௌகரியங்களையும் அளிப்பேன் என்று தேவி பாகவதத்தில் அம்பாள் கூற்றாக வருவது கொலு வைப்பதற்கு முன்னோடியாக அமைந்திருக்க லாம் அல்லவா !

கொலு மேடையில் கீழிருந்து முதற்படியிலே - ஓரறிவான, புல், செடி போன்றவற்றையும், இரண்டாம் படியில், ஈரறிவுடைய நத்தை, சங்கு போன்றவற்றையும், மூன்றாவது படியில், மூன்றறிவுடைய கறையான்,



எறும்பு போன்றவற்றையும், நான்காம் படியில் நான்கறிவான நண்டு, வண்டு, போன்றவற்றின் பொம்மைகளியும், ஐந்தாம்படியில் ஐந்தறிவான மிருகங்கள், பறவைகளின் பொம்மைகளை வைத்தல் வேண்டும்.ஆறாவது படிதான் எங்களுக்கு உரியதாகும்.சிந்திக்கும் அறுவுடைய நிலை மனிதர்களுக்கே இருப்பதால் இந்தப் படியை மணிதர்களின் பலவகைப் பொம்மைகள் இடம் பெற்றிருக்கும்.ஏழாவது படியானது - மனிதனாய் இருந்தும் உயர்நிலையினை எய்திய ரிஷிகளுக்கு உரியதாய் அமைகிறது.

அங்கு ரிஷிகளின் பொம்மைகள் வைக்கப்படும். மனித ருக்கும் ரிஷிகளுக்கும் அப்பால் தேவர்கள் வருகிறார்கள்.

எனவே எட்டாம் படியில் தேவர்கள் இடம் பெறுவார்கள். இதில் நவக்கிரகங்கள், அட்ட திக்குபாலகர்கள், தேவைதைகளின் பொம்மை கள் வைக்கப்படும்.ஒன்பதான் படிதான் கடவுளருக்கு உரிய இடமாகும்.பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய முப்பெருந் தெய்வங்களும், ஸரஸ்வதி , லக்ஷ்மி, பார்வதி ஆகிய முப்பெருந் தேவியரும், இடம் பெறுவர். நடுநாயகியாய் ஆதிபராசக்தியின் பொம்மை வீற்றிருக்கும்.

வெறும் பொம்மைகளைக் கொண்டதாக கொலு அமைந்து விட்டது என்று எண்ணி விடக்கூடாது. மனிதன் என்பவன் தன்னு டைய ஆன்மீக சிந்தனைகளை வளர்த்துக் கொண்டே வருகிறான்.அவனின் ஆன்மீகச் சிந்தனை பிரகாசிக்கும் நிலையில் முடிவில் இறைவனுடன் கலக்கவே வேண்டும். அப்படியான ஒரு தத்துவார்த்தத்தை உணர்த்துவதாகவே நவராத்திரியில் வைக்கப்படும் கொலு காட்டி நிற்கிறது என்பது மனங்கொள்ளத்தக்கதாகும். .

இறை சக்தியால் நாமெல்லாம் இயங்குகிறோம். இறைசக்தியே எமக்கு இயக்க சக்தியாகும். அந்தச் சக்தியே அறிவை செல்வத்தை ஆற்றலை அளிக்கிறது. அந்த அளவிட முடியாத சக்தி அளித்த ஆற்றலை - அந்தச் சக்தியின் ஆசியுடன் வாழ்வில் கையாண்டால் வாழ்க்கை வழமாகும். வாழ்க்கை வையயத்துழ் வசந்தமாக அமை யும். இப்படி வாழ்வியலோடு இணைந்த சக்தி யாய் அமைவதுதான் நவராத்திரி விழாவின் கருப்பொருள் எனலாம்.

மாதா பராசக்தி வையமெல்லாம் நீ நிறைந்தாய்!
ஆதாரம் உன்னையல்லால் ஆரெமக்குப் பாரினிலே!
ஏதாயினும் வழிநீ சொல்வாய் எமதுயிரே!
வேதாவின் தாயே! மிகப்பணிந்து வாழ்வோமே.
வாணி கலைத் தெய்வம் மணிவாக் குதவிடுவாள்
ஆணிமுத்தைப் போலே அறிவுமுத்து மாலையினாள்
காணுகின்ற காட்சியாய்க் காண்பதெலாங் காட்டுவதாய்
மாணுயர்ந்து நிற்பாள் மலரடியே சூழ்வோமே
பொன்னரசி நாரணனார் தேவி, புகழரசி
மின்னுநவ ரத்தினம்போல் மேனி யழகுடையாள்
அன்னையவள் வையமெல்லாம் ஆதரிப்பாள், ஸ்ரீதேவி
தன்னிரு பொற்றாளே சரண்புகுந்து வாழ்வோமே




காலைக்கதிர் Kalaikkathir

# கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி மூடி மறைக்கப்படுமா எனச் சந்தேகம்

## எழுகின்றது என்கிறார் துரைராசா ரவிகரன்



கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி மூடி மறைக்கப்படுமா என்ற சந்தேகம் தற்போது எழுகின்றது என முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி இடத்தைசனிக்கிழமைபிற்பகல்நேரில்சென்று பார்வையிட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்.

கொக்குதொடுவாய்புதைகுழிதொடர்பான விடயத்தை பார்க்கும் போது ஏற்கனவே இறுதி நாளன்று17 உடலங்கள்புதைகுழியின் ஊடாக கண்டுபிடிக்கப்பட்டதாகவும், நிறுத்தப்பட்ட தினத்தின்போது ஒக்ரோபர் மாதம் நடுப்பகுதி அல்லது பிற்பகுதி அடுத்த அகழ்வு ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், அண்மையில் நிதி போதாத நிலைமையை சுட்டிக்காட்டி காலதாமதம் ஆகலாம் என்று ஒரு தகவல் வெளியிடப்பட்டிருந்தது.

எங்களுக்குஇதில்ஒருஐயம்ஏற்படுகின்றது என்னவென்றால்காலதாமதங்கள்,நிதிஇல்லை என்று கூறுவதும், ஒக்ரோபர் மாதத்துக்கு பிற்போடப்பட்டதும், குறித்த காலப்பகுதி மழை காலமாக இருப்பதாலும் இப்படியே மூடி மறைக்கப்பட்டு விடுமோ என்ற சந்தேகம் ஒன்று ஏற்பட்டுள்ளது.

காணாமல்ஆக்கப்பட்டஉறவுகள்தாங்கள் ஒப்படைத்த பிள்ளைகளை தருமாறு கூறி 2000 நாள்களுக்கு மேலாக போராட்டம் நடத்தி கொண்டிருக்கிறார்கள். உறவுகளைத் தவிர மக்கள் என்ற வகையில் தங்களுடைய உறவுகளுக்கு இறுதி யுத்தத்தில் சரணடைந்த உறவுகளுக்கு என்ன நேர்ந்தது? என்று தெரியாமல் திண்டாடிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் அரசாங்கத்தினுடைய இவ்வாறான ஓர் அறிவித்தலானது இனப்படுகொலை என்று கூறி உண்மைத்தன்மையோடு வெளிவர வேண்டிய இந்தச் சந்தர்ப்பங்கள் அரசாங்கத்தால் மூடி மறைக்கப்படுகின்றனவா? என்ற கேள்வி மக்களிடத்திலே எழுகின்றது.

தயவுசெய்து உண்மைத் தன்மையோடு செயற்படுத்துங்கள். சட்டத்தின் ஆட்சியை நடத்துங்கள் வெளிப்படைத்தன்மையை மக்களோடு பேணுங்கள். இந்த வகையில் நடந்தால் உங்களுடைய நடவடிக்கைகள் அத்துமீறிய இனப்படுகொலையை செய்ததற்கான சாட்சியாகக் கூட அமையும்.

இதற்கு அரசாங்கத்தோடு சேர்ந்து துணை போகின்ற நடவடிக்கையையும் விட்டு ஆழ அகன்று அதிலுள்ள உண்மைதன்மை வெளிப்படக்கூடியதாக எத்தனை உடலங்கள் இருந்தன? எப்போது இந்த உடலங்கள் சம்பந்தப்பட்ட விடயங்கள் அனைத்தும் வெளிவரக்கூடிய வகையில், சட்டத்தின் ஆட்சி நடைபெறக் கூடிய வகையில் குறித்த அகழ்வுபணியைத் தொடர்ந்து செய்யுங்கள் என கேட்டுக் கொள்வதோடு மக்களை ஏமாற்றாதீர்கள் தமிழ் மக்களுக்கு நேர்ந்த இனப்படுகொலையை மூடி மறைக்க வேண்டாம் என மேலும் தெரிவித்தார்.

(05)

# இரண்டு மோட்டார் சைக்கிள்கள் அக்கரைப்பற்றில் மோதி விபத்து

## ஒருவர் காயம்; இருவர் உயிரிழப்பு

அம்பாறை அக்கரைப்பற்று பிரதேசத்தில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதி இடம்பெற்ற விபத்தில் ஒருவர் காயமடைந்துள்ளதுடன், இருவர் உயிரிழந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிள் பயணித்த வேளை ஓட்டோ முன்நோக்கி செல்ல முயன்ற போது எதிரில் வந்த மற்றுமொறு மோட்டார் சைக்கிளுடன் மோதி இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொத்துவில் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த விபத்தில் பொத்துவில் பிரதேசத்தை சேர்ந்த 51 மற்றும் 77 வயதுடையவர்களே உயிரிழந்துள்ளனர்.

அக்கரைப்பற்றில் இருந்து பொத்துவில் நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் பொத்துவில் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக கொண்டுசெல்லப்பட்ட போது உயிரிழந்துள்ளார் எனவும் பொத்துவிலில் இருந்து அக்கரைப்பற்று நோக்கிபயணித்தமோட்டார்சைக்கிளில்பயணித்தவர் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக கொண்டுசெல்லப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்த மற்றுமொருவர் மேலதிக சிகிச்சைக்காக கல்முனை வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளார்.

இந்த விபத்து தொடர்பில் பொத்துவில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(05)



# உயிரிழந்த நிலையில் கரையொதுங்கிய சுறா

## முல்லைத்தீவு கடற்கரையில்

முல்லைத்தீவு - அளம்பில் கடற்கரையில் உயிரிழந்த நிலையில் சுறா ஒன்று சனிக்கிழமை கரையொதுங்கியுள்ளதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு அளம்பில் கடற்கரையில் 15 அடி நீளமுடைய சுறா ஒன்றே இவ்வாறு உயிரிழந்த நிலையில்கரையொதுங்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இலங்கை கடற்கரையில் தொடர்ச்சியாககடல்வாழ்உயிரினங்கள் இறந்த நிலையில் மீட்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு இறந்த நிலையில் கரை ஒதுங்கிய டொல்பின் கடலாமைகள் மற்றும்ஏனையகடல்வாழ்உயிரினங்கள் கடற்தொழில்திணைக்கள அதிகாரிகள் பகுப்பாய்வு செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# காலி அஹுங்கலவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் 3 பேர் காயம்

காலி – அஹுங்கல – கல்வெஹர பகுதியில்மேற்கொள்ளப்பட்டதுப்பாக்கிப் பிரயோகத்தில் மூன்று பேர் காயமடைந்துள்ளனர்.

அஹுங்கல பாடசாலைக்கு அருகிலுள்ள உரகஹா வீதியில் குறித்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்களில் பயணித்த 3 பேரே இவ்வாறு துப்பாக்கிப் பிரயோகத்துக்கு இலக்காகியுள்ளனர்.

துப்பாக்கி சூட்டில் காயமடைந்த மூவரும்சிகிச்சைகளுக்காகபலப்பிட்டிய வைத்தியசாலையில்சேர்க்கப்பட்டுள்ள நிலையில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# வருடாந்த வனவிலங்கு புகைப்படக் கண்காட்சி













வருடாந்த வனவிலங்குகளை புகைப்படம் எடுத்தல் மற்றும் வனவிலங்கு கலை கண்காட்சி இடம்பெற்றது.

இலங்கையின் இளம் விலங்கியல் நிபுணர்கள் சங்கத்தால் குறித்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சனிக்கிழமை ஆரம்பமான குறித்த கண்காட்சி ஞாயிற்றுக்கிழமையும் இடம்பெற்றது.

தேசிய அருங்காட்சியகத்தில்இடம்பெறும்இந்தக் கண்காட்சியை காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை பொதுமக்கள் பார்வையிட முடியும்.

(05)

காலைக்கதிர் Kalaikkathir

# அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளர் நிறுத்த முடிவு

## தமிழ் அரசு, விக்கி அணியுடன் விரைவில் பேச்சு என்கிறார் சுரேஷ்

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் தமிழ் அரசியல்கட்சிகளின் சார்பில் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கு ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி கொள்கையளவில் இணக்கம் கண்டுள்ள நிலையில், அடுத்துவரும் நாள்களில் மாவை சேனாதிராஜா தலைமையிலான இலங்கைத்தமிழரசுக்கட்சி மற்றும் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணி ஆகியவற்றுடன் பேச்சுக்களை நடத்துவதற்கு எதிர்பார்த்துள்ளதாக அக்கூட்டணியின் ஊடகப்பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

2009 ஆம் ஆண்டுக்குப் பின்னரான காலத்தில் நடைபெற்றுள்ள ஜனாதிபதி தேர்தல்களில் தமிழ் மக்களின் ஆணையைப்பெற்றுக்கொடுக்கும் முகமாக தமிழ்க் கட்சிகள் முறையே சரத்பொன்சேகா, மைத்திரிபால சிறிசேனா, சஜித் பிரேமதாஸ ஆகியோருக்கு ஆதரவு தெரிவித்து செயற்பட்டிருந்தன.

இதில் இரண்டு வேட்பாளர்கள் வெற்றியடைந்திருக்கவில்லை. மைத்திரிபால சிறிசேன மட்டுமே வெற்றிபெற்றிருந்தார். ஆனால்தமிழ் மக்களுக்குவழங்கப்பட்டவாக்குறுதிகள் எவையும் நிறைவேற்றப்படவில்லை.

இவ்வாறு தொடர்ச்சியாகத் தென்னிலங்கை தலைவர்களில் ஒருவரைத் தெரிவு செய்வதும், பின்னர் அவர்கள் ஏமாற்றுவதுமான நிலைமைகள் வரலாறு நெடுகிலும் தொடர் கதையாக உள்ளன.

தற்போதைய சூழலில் நாடு பொருளாதார நெருக்கடிகளைச் சந்தித்திருக்கின்றபோதிலும் தமிழ் மக்களின் கோரிக்கைகள் தொடர்ச்சியாக நிராகரிக்கப்பட்டு வரு கின்றன. அதேநேரம், திட்டமிட்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள்உள்ளிட்டவைநீண்டுகொண்டிருக்கின்றன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதிகாரங்களைப் பகிரப் போவதாகவும், 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுலாக்கப்போவதாகவும்அறிவித்து சில கலந்துரையாடல்களைச் செய்திருந்தார். இருப்பினும் அந்தக் கலந்துரையாடல்கள் திருப்திகரமானவையாக இருக்கவில்லை என்பதோடு தேரர்களின் எதிர்ப்பால் கைவிடப்பட்ட நிலைக்குச் சென்றிருக்கின்றது.

ஆகவே, அடுத்த ஆண்டு நவம்பர் மாதமளவில் தேர்தல் நடத்தப்படுவதற்கான சாத்தியப்பாடுகள் அதிகமாக உள்ளன. அந்தத் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கஉள்ளிட்டவர்களும்இன்னும் சிலரும் களமிறங்கவுள்ளனர் எனத் தற்போதைக்கு கூறப்பட்டுள்ளது.

ஆனால்மேற்படிநபர்கள்யாரும் தமிழர்களின் விடயத்தில் பகிரங்கமான உடன்பாடுகளை எட்டுவதற்குத் தயராகவில்லை. ஆகக்குறைந்தது அரசமைப்பில்உள்ளடக்கப்பட்டுள்ள 13 ஆவது திருத்தச் சட்டத்தைக் கூட முழுமையாக அமுலாக்குவதற்கு தயார் என்ற அறிவிப்பைச்செய்வதற்குத் தயாரில்லாதவர்களாக உள்ளனர்.



ஆகவே தான், தமிழ் கட்சிகளுக்கு இடையில் உடன்பாடுகளை எட்டி, தமிழ் மக்களின் வாக்குகள் அனைத்தும் எம்மால் நிறுத்தப்படும் பொதுவேட்பாளர் ஒருவருக்கு பெற்றுக்கொடுக்க வேண்டும் என்ற பிரசாரத்தை முன்னெடுப்பதற்குத்தீர்மானித்துள்ளோம்.

இந்த முயற்சியால் எம்மால் நிறுத்தப்படும் வேட்பாளர் ஜனாதிபதி அரியாசனத்தில் அமரப்போகின்றார் என்பது அர்த்தமல்ல. மாறாக, தமிழ் மக்கள் தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டு வந்துள்ளமையால் அவர்கள் தென்னிலங்கைத்; தலைவர்களை நம்பி வாக்களிப்பதற்குத் தயார் இல்லை என்ற செய்தியை வெளிப்படுத்துவதே இலக்காக உள்ளது.

மேலும், தென்னிலங்கையில் தற்போதுள்ள கருத்துக்கணிப்புக்களின்பிரகாரம், ஒன்றுக்குமேற்பட்ட வேட்பாளர்கள் களமிறங்கினால் எந்தவொருவரும் முதலாம் இரண்டாம் சுற்றில் கூட 51சதவீதமானத்துக்குஅதிகமானவாக்குகளைப் பெறுவதற்கான சாத்தியப்பாடுகள் குறைவாகவே உள்ளன. இதனால் தமிழ் மக்களின் வாக்குகள் தீர்மானிக்கும்நிலையை அடைவதற்கான சாத்தியங்களும் உள்ளன. ஆகவே தான் பொதுவேட்பாளர் ஒருவரை தமிழ்கட்சிகள் இணைந்து நிறுத்துவதென தீர்மானித்துள்ளோம்.

இதற்கு ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் பங்காளிக்கட்சிகள் இடையே கொள்கையவிலான இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. அதேநேரம், இலங்கைத் தமிழரசுக்கட்சி, தமிழ் மக்கள் கூட்டணி ஆகியவற்றுடன் உத்தியோக பூர்வமான பேச்சுக்கள் நடத்தப்படவுள்ளன. – என்றார்.(05)

# 200 அரச வர்த்தக நிறுவனங்களின் வருடாந்த அறிக்கையை இல்லை

## காமினி வலேபொட குற்றச்சாட்டு

அரசுக்குச் சொந்தமான 200 வர்த்தக நிறுவனங்கள் மற்றும் ஏனைய வியாபார நிறுவனங்கள் கடந்த இரண்டு வருடங்களில் தமது வருடாந்த அறிக்கைகளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லையென பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தைக் குறைப்பதற்கான துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் காமினி வலேபொட தெரிவித்துள்ளார்.



இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தை குறைப்பதற்கான துறைசார் மேற்பார்வைக் குழுவானது, பல்வேறு விடயங்கள் சம்பந்தமாகத் தொடர்ச்சியாக ஆராய்ந்து வருகின்றது.

குறிப்பாக, பொருளாதார நெருக்கடிகளைத் தணிப்பதற்கு தடையாக உள்ள காரணங்கள் அல்லது பின்னணியில் உள்ள விடயங்கள் சம்பந்தமாக தீவிரமான கரிசனைகளைக் கொண்டுள்ளது.

அதனடிப்படையில் அரசாங்கத்துக்குச் சொந்தமான 200 வர்த்தக நிறுவனங்கள் மற்றும் ஏனைய வியாபார நிறுவனங்கள் கடந்த இரண்டு வருடங்களாக அறிக்கைகளைச் சமர்ப்பிக்கப்படாமை கண்டறியப்பட்டுள்ளது.

அத்தகைய நிறுவனங்களின் வருடாந்த அறிக்கைகளை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு பொதுநிறுவனங்கள் திணைக்களத்திற்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. – என்றார்.

இதேவேளை, பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தைத் தணிக்கும் துறைசார் மேற்பார்வைக் குழுவில் அங்கம் வகித்த நாடாளுமன்ற உறுப்பினர்களான பழனி திகாம் பரம் மற்றும் எம்.ராமேஸ்வரன் ஆகியோர் பதவிகளை துறந்த நிலையில் அவர்களின் வெற்றிடத்தை நிரப்புவதற்காக சரத்வீரசேகர மற்றும் நாலக்க பண்டார கொத்தேகொட ஆகிய இரண்டு புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

துறைசார் கண்காணிப்புக் குழுவில் இருந்து விலகியதன் காரணமாகவே இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. (05)

# நேர்மறையான அடைவுகளுக்கு மத்தியிலும் பொருளாதார மறுசீரமைப்பு தொடரட்டும்

## வலியுறுத்துகிறது இலங்கை வர்த்தக சம்மேளனம்

சர்வதேச நாணய நிதியத்துடனான அடுத்தகட்ட இணக்கப்பாடு உள்ளடங்கலாக அரசாங்கத்தின் தற்போதைய அடைவுகளைப் பாராட்டும் அதேவேளை, நிலையான பொருளாதார மீட்சி, ஸ்திரத்தன்மை மற்றும் வளர்ச்சி ஆகியவற்றை அடைந்துகொள்வதை இலக்காகக்கொண்டு முன்னெடுக்கப்பட்டுவரும் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் தொடர வேண்டும் என்று இலங்கை வர்த்தக சம்மேளனம் வலியுறுத்தியுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதியுதவிச் செயற்திட்டத்தின்கீழ் இலங்கை தொடர்பான முதலாம் கட்ட மதிப்பீட்டுக்கு நாணய நிதியத்தின் பணிப்பாளர் சபை கடந்த வியாழக்கிழமை ஒப்புதல் அளித்துள்ளது. இதனூடாக அச்செயற்திட்டத்தின்கீழ் இரண்டாம் கட்டமாக 330 மில்லியன் டொலர் கடன்நிதி இலங்கைக்கு வழங்கப்படவுள்ளது.

இதுகுறித்து வாழ்த்துத்தெரிவித்து அறிக்கையொன்றை வெளியிட்டிருக்கும் இலங்கை வர்த்தக சம்மேளனம், 'இந்த அடைவுகளைப் பாராட்டும் அதேவேளை, நிலையான பொருளாதார மீட்சி, ஸ்திரத்தன்மைமற்றும்வளர்ச்சிஆகியவற்றை அடைந்துகொள்வதை இலக்காகக்கொண்டு தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை அவ்வாறே பேணுமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம்'என்றுதெரிவித்துள்ளது.

அதேபோன்று ஆட்சியியல் குறைபாடுகள் மற்றும் ஊழல் மோசடிகளுக்கான சாத்தியப்பாடுகள் போன்றவற்றை சீரமைப்பது இன்றியமையாதது எனவும், இவ்விடயங்களில் மறுசீரமைப்புக்கள் மேற்கொள்ளப்படவேண்டியதன் அவசியம் குறித்து சர்வதேச நாணய நிதியத்தின் ஆட்சியியல் ஆய்வு அறிக்கையிலும் வலியுறுத்தப்பட்டிருக்கிறது எனவும் இலங்கை வர்த்தக சம்மேளனம் குறிப்பிட்டுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் இலங்கைப்பிரஜைகள் அனைவரும் மறுசீரமைப்பு செயற்திட்டங்களில் முனைப்புடன் பங்கேற்கவேண்டும். நாடு முகங்கொடுத்திருக்கும் நிதியியல் சவாலில் இருந்து மீட்சியடைவதற்கும், நாட்டை வளர்ச்சிப்பாதையில் கொண்டுசெல்வதற்கும் கூட்டிணைந்த நடவடிக்கை இன்றியமையாததாகும்' எனறும் வர்த்தக சம்மேளனம் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும் தற்போதைய மறுசீரமைப்புக்கள், சிறந்த ஆட்சியியல் நிர்வாகம் மற்றும் கூட்டிணைந்த பொறுப்புணர்வின் மூலம் நாட்டை மீண்டும் பொருளாதார வளர்ச்சி மற்றும் ஸ்திரத்தன்மையை நோக்கிய பாதையில் கொண்டுசெல்லமுடியும் எனவும் இலங்கை வர்த்தக சம்மேளனம் நம்பிக்கை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(05)

# சகல பொருளாதார துறைகளையும் டிஜிற்றல் மயப்படுத்துக சர்வதேச வர்த்தக சம்மேளன தலைவர் மரியா வலியுறுத்து

நாட்டின் பொருளாதாரத்தின் சகல துறைகளும் டிஜிற்றல் மயப்படுத்தப்படுவதன் மூலமே அவற்றின் உலகளாவிய தரத்தை உறுதிசெய்யமுடியும் என்று சர்வதேச வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் மரியா பெர்னாண்டா கார்ஸா சுட்டிக்காட்டியுள்ளார்.

உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு கடந்த புதன்கிழமை இலங்கைக்கு வருகைதந்த சர்வதேச வர்த்தக சம்மேளனத்தின் முதலாவது பெண் தலைவர் மரியா பெர்னாண்டா கார்ஸா, அலரிமாளிகையில் பிரதமர் தினேஷ் குணவர்தனவை சந்தித்துக் கலந்துரையாடியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தச்சந்திப்பின்போது –

இலங்கையில் வர்த்தகம் மற்றும் முதலீடு, வங்கி, காப்புறுதி, கல்வி மற்றும் பயிற்சி வழங்கல், நிதி, சுற்றுலா, விவசாயம், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வணிகங்கள், முயற்சியாண்மை அபிவிருத்தி உள்ளிட்ட பல்வேறுதுறைகளில்சர்வதேசவர்த்தகசம்மேளனத்தின் வகிபாகம் குறித்து ஆராயப்பட்டது.

அதேவேளை உணவுப்பாதுகாப்பு மற்றும் ஏற்றுமதி உள்ளடங்கலாக அரசாங்கம் விசேட கவனம்செலுத்திவரும் முன்னுரிமைக்குரிய விடயங்கள் தொடர்பில் சர்வதேச வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் மரியா பொ்னாண்டா கார்ஸாவிடம் பிரதமர் எடுத்துரைத்தார்.

அவரைத்தொடர்ந்து கருத்து வெளியிட்ட மரியா பெர்னாண்டா கார்ஸா, 'சர்வதேச வர்த்தக சம்மேளனத்தில் 170 நாடுகள் அங்கம்வகிப்பதுடன் 45 மில்லியன் நிறுவனங்கள் வர்த்தக உறுப்புரிமையைக் கொண்டிருக்கின்றன. அதேபோன்று இதில் அங்கம்வகிக்கும் நிறுவனங்கள் உணவுப்பாதுகாப்புசார் சவால்களை உரியவாறு கையாள்வதற்கு அவசியமான உதவிகளை வழங்கும் நோக்கில் கடந்த 2021 ஆம் ஆண்டு விவசாயக் கொள்கை, உணவுப்பாதுகாப்பு மற்றும் விநியோகசங்கிலி தொடர்பான குழு உருவாக்கப்பட்டது' என்று சுட்டிக்காட்டினார்.



அதேபோன்று உலகளாவிய தரத்தை உறுதிப்படுத்துவதற்கு பொருளாதாரத்தில் சகல துறைகளும் டிஜிற்றல் மயப்படுத்தப்படவேண்டியது அவசியம் எனவும் அவர்வலியுறுத்தியமைகுறிப்பிடத்தக்கது. (05)

# மின்சாரக் கட்டணத்தைச் செலவுகளுக்கு பொருந்தும் வகையில் பேணுவது அவசியம்

## சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டு



மின்சாரக் கட்டணத்தை செலவுகளுக்குப் பொருந்தும் வகையில் பேண வேண்டியது அவசியமான விடயமாகுமென சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான தூதுக்குழுவின் பிரதித்தலைவர் கத்ஸ்யரினா ஸ்விரிட்சென்கா வலியுறுத்தியுள்ளார்.

வொஷிங்டனில் நடைபெற்ற நிகழ்நிலை கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மின்சாரம் தொடர்பான நட்டத்தைஈடுசெய்வதற்கான துரித நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டியது மிகவும் முக்கியமானது என்பதை நாம் வலியுறுத்த விரும்புகின்றோம்.

அவ்வாறு இல்லாது விட்டால் வரிசெலுத்துபவர்கள், சமூகத்தில் ஆபத்தை எதிர்நோக்கும் தரப்பினருக்கு அது சுமையாக அமைந்து விடும். சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான நிதி உதவித் திட்டங்களிலும் அது முக்கியமானதொரு அங்கமாகும்.

வரிசெலுத்துபவர்களின் மீதான சுமையைக் குறைப்பதற்கு வலுவான சமூகப்பாதுகாப்பொன்றே இருக்க வேண்டும். மின்சாரத்துறையும் செயற்றிறன் மிக்கதாக அமைய வேண்டும்.

அரசுரீதியான தொழில்முயற்சிகளை மேற்கொள்வதற்கு அமைப்புரீதியான மறுசீரமைப்புக்களை மேற்கொள்ள வேண்டும். அதன்மூலம் மத்தியகால, நெடுக்காலத்துக்கு ஏற்றவகையில் மின்சார செலவுகளைக் குறைத்துக்கொள்ள வேண்டும்.

இலங்கையின் அதிகாரிகள் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். ஆகவே அப்பணிகள் கிரமமாக வெற்றிபெறும் என்று எதிர்பார்க்கின்றோம். - என்றார். (05)

# கிழக்கிலுள்ள சிங்களவர்கள் வெளியேற்றம் பொய் தகவல்

## அடியோடு மறுக்கிறார் செந்தில்

கிழக்கு மாகாணத்திலுள்ள பெரும்பான்மையினத்தவர்களை வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாக உண்மைக்கு புறம்பான தகவல்கள் மக்கள் மத்தியில்கொண்டுசெல்லப்படுகின்றன என கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாள்களாக பௌத்த குருமார்கள் தன்னையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையும் குறை கூறிக்கொண்டு செயற்படுகின்றார்கள். இவ்வாறான செயற்பாடுகளைவன்மையாகக்கண்டிப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் அரசாங்கத்திற்கு சொந்தமான நிலங்களைக் கைப்பற்றினால் அதுஎந்தஇனத்தவர்களாகஇருந்தாலும் சட்டநடவடிக்கைஎடுக்கப்படும்என்றும் குறிப்பிட்டார்.

நாட்டில் மீண்டும் ஒருமுறை இனப்பிரச்சினையை ஏற்படுத்தும் வகையில் செயற்படுபவர்கள் தொடர்பில் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மேலும் தெரிவித்துள்ளார்.

(05)

# வடக்கு, கிழக்கு விவகாரத்தில் ஒருதலைப்பட்ச செயற்பாடுகள்

## ஜனாதிபதியை சாடுகிறார் யஹம்பத்



வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலவும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் விவகாரத்தில் ஜனாதிபதி ஒருதலைப்பட்சமாக செயற்படுகிறார். சிங்களவர்களுக்குஒருசட்டம், தமிழர்களுக்கு ஒருசட்டம்அமுல்படுத்தப்படுகிறது. திம்புலாகல பகுதியில் உள்ள சிங்களவர்களை வெளியேற்ற ஒருபோதும் இடமளிக்க முடியாது என கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் அனுராதா யஹம்பத் தெரிவித்தார். கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரை விவகாரத்தை முன்னிலைப்படுத்திமட்டக்களப்பு, திம்புலாகல சிங்கள கிராமத்தில் வாழும்சிங்களமக்களைவெளியேற்றுமாறு மட்டக்களப்பு மாவட்ட தமிழ் பிரதிநிதிகள் தொடர்ந்து வலியுறுத்துகிறார்கள்.

மயிலத்தமடு பண்ணை மேய்ப்பாளர்களின் பிரச்சினைகளுக்கு மாற்றுத்திட்டங்களை செயற்படுத்தஉரியநடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இருப்பினும் சிங்களவர்கள் அப்பகுதியில் இருக்கக்கூடாதுஎன்றநோக்கத்தில் இருந்துகொண்டுஒருதரப்பினர்கள் செயற்படுவதால் மாற்றுத்திட்ட அமுலாக்கம் தடைப்பட்டது.

மட்டக்களப்புதிம்புலாகலபகுதியில் வாழும் சிங்களவர்கள் யுத்த காலத்தில் விடுதலைப்புலிகளால் அழிக்கப்பட்டார்கள். யுத்த காலத்தில்தமதுசொந்தஇடங்களில் இருந்து வெளியேற்றப்பட்ட சிங்களவர்கள் பொலன்னறுவை, ஹபரனமற்றும்அம்பாறைஆகிய பகுதிகளில்வாழ்ந்தார்கள். யுத்தம் நிறைவடைந்ததன்பின்னர்உரிய ஆவணங்களுடன் திம்புலாகல பகுதியில்சிங்களவர்கள்மீண்டும் குடியேறினார்கள். மயிலத்தமடு மாதவனை பகுதி பண்ணை மேய்ப்பாளர்களின் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக திம்புலாகல பகுதியில்வாழும்சிங்களவர்களை வெளியேற்றுமாறு குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. சிங்களவர்களை அவர்களின் பாரம்பரிய கிராமத்தில் இருந்து வெளியேற்ற எவருக்கும் அதிகாரமில்லை.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலவும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் விவகாரத்தில் ஜனாதிபதி ஒருதலைப்பட்சமாக செயற்படுகிறார். சிங்களவர்களுக்கு ஒரு சட்டம், தமிழர்களுக்கு ஒரு சட்டம் அமுல்படுத்தப்படுகிறது. வடக்கு மற்றும் கிழக்கில் சிங்களவர்கள்வாழக்கூடாதுஎன்ற நிலைப்பாட்டில் இருந்துகொண்டு தமிழ் அரசியல் தரப்பினர் செயற்படுவதால் முரண்பாடற்ற தீர்வு காண முடியாமல் உள்ளது. பிரச்சினைகள் நீண்டு செல்கின்றன. - என்றார். (05)



# சந்தோஷ் நாராயணனின்'யாழ் கானம்' நிகழ்வில் இந்திய இராணுவம் கொன்றோருக்கு அஞ்சலிகள்

யாழ்ப்பாணம், முற்றவெளி மைதானத்தில்சனிக்கிழமைநடைபெற்ற தென்னிந்திய இசையமைப்பாளர் சந்தோஷ்நாராயணனின்'யாழ்கானம்' இசை நிகழ்ச்சியின் முதல் அம்சமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இந்திய இராணுவத்தினரால் கொல்லப்பட்டவர்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இந்திய இராணுவத்தினரால் நடத்தப்பட்ட படுகொலையை மறைக்கவே அதே நாளில் இசை நிகழ்ச்சி நடத்தப்படுவதாக சர்ச்சைகள் எழுந்த நிலையில், இசை நிகழ்ச்சியின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கொல்லப்பட்டவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்தநிகழ்வின்போதுகுறிப்பிடப்பட்ட விடயமாவது -

கலையும் கலாசாரமும் சிறந்து ஓங்கும் இந்த யாழ் மண்ணில் 'யாழ் கானம்' என்ற இசை நிகழ்ச்சியை அளிப்பதில் சந்தோஷ் நாராயணனும் அவர் குழுவினரும் பெருமகிழ்ச்சி கொள்கின்றனர். இம்மண்ணும் இம்மண்ணில் வாழும் மக்களும் கண்ட துயர்கள் அநேகம். ஒரு வருடத்தின் 365 நாள்களில் எந்த திகதியையும் எடுத்து வரலாற்று ஏடுகளைப் பின்னோக்கி புரட்டினாலும் அந்த திகதியில் ஒரு கொடூர சம்பவம், ஒரு துயர்மிகு சம்பவம் நிகழ்ந்திருக்கும்.

ஏன், இன்றும் இத்திகதியில் சரியாக 36 வருடங்களுக்கு முன் யாழ். போதனா வைத்தியசாலையில் நடந்த கொடூரமான நிகழ்வை நாம் துயருடன் நினைவுகூர்ந்துகொண்டிருக்கிறோம். கலை நிகழ்ச்சிகள் உள்ளத் துயர்களை நீக்கும் மருந்தாவன. அதனால் சந்தோஷ் நாராயணனும் அவரது குழுவும் இவ்விசை விருந்தை ஓர் இசை மருந்தாகவே மக்களுக்கு வழங்குகின்றனர்.

ஆதலால் பல தசாப்தங்களாக நடந்த கொடிய யுத்தத்தில் மறைந்த எம் நாட்டு மக்களுக்கு ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்திவிட்டு இம்மருந்தை அருந்துவதே பொருத்தமானதாய் இருக்கும்.

இயலுமானவர்கள் எல்லோரும் எழுந்து ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்துமாறு வேண்டுகிறோம் என தமிழிலும் ஆங்கிலத்திலும் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து உயிரிழந்தவர்களுக்காக அனைவரும் எழுந்து நின்று, ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தினர். (05)

# போதை ஒழிக்க தகவல் தருக இரகசியம் பேணப்படும்

## புதுக்குடியிருப்பு பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவிப்பு

போதைப்பொருளைஒழிக்கதகவல்களை தாருங்கள்; இரகசியம் பேணப்படும் என புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஹெரத் தெரிவித்தார்.

கிராமங்களிலுள்ள மக்களின் பிரச்சினைகளை வெளிக்கொண்டுவரும் முகமாக ஜனசபா அங்குரார்ப்பண நிகழ்வு சனிக்கிழமை புதுக்குடியிருப்பு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தபோதே ஹெரத் இவ்வாறு கூறினார்.

அங்கு மேலும் அவர் குறிப்பிடுகையில் -

புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்டு 19 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் உள்ளன.

நான் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்துக்கு கடமைக்கு வந்து இரண்டு வருடங்கள் ஆகின்றன.

அதிகமாககசிப்பு,போதைப்பொருளோடு தொடர்புடைய பிரதேசமாக புதுக்குடியிருப்பு, புதிய குடியிருப்பு கிராமமே இருக்கிறது.

தினந்தோறும், வாரந்தோறும், மாதந்தோறும் சுற்றிவளைப்புக்களை மேற்கொண்டு வழக்கு தாக்கல்களை செய்து வருகின்றோம். அதற்கான சாட்சியங்கள் எங்களிடம் இருக்கின்றன. பொலிஸ் என்ற அடிப்படையில் கசிப்பை நிறுத்துவதற்குரிய செயற்பாடுகள் எவை என்பது எங்களுக்குத் தெரியும். பொதுச்சபையில் இவ்விடயத்தை பொதுமக்கள் கூறியமை எனக்கு சந்தோமாக இருக்கின்றது.

கிராமத்தில் இருக்கக்கூடிய அதிகமானோர் பொலிஸில் முறைப்பாடோ அல்லது தகவல்களோ வழங்குவதில்லை. இருப்பினும் அவ்வாறான இடங்களுக்கு எமது அதிகாரிகளை அனுப்பி, முடியுமான வரை நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். சிலர் தகவல்களை வழங்கினாலும், அவர்களது பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொண்டே சுற்றிவளைப்புக்களைமேற்கொள்கின்றோம். இந்த செயற்பாடுகளுக்கு எல்லாம் இறுதியில் தீர்ப்பு வழங்கப்படுவது நீதிமன்றத்திலேயே. மனித உரிமைகள், சட்டங்கள், மக்களுடைய பாதுகாப்பு ஆகிய விடயங்கள் கருத்தில் கொள்ளப்படும். நீங்கள் தகவல்களை தாருங்கள். தற்போது கைது செய்யப்படுபவர்களை விட, இன்னும் அதிகமானோர் கைதாவார்கள்.

ஜனசபாசெயற்குழுவைஉருவாக்கியதன் காரணமே இவ்வாறான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கே ஆகும். ஆகவே, உங்கள் பிரச்சினைகளை எமக்கு அறியத்தாருங்கள். தகவல்கள் பாதுகாக்கப்படும் என மேலும் தெரிவித்தார். (05)

# தேர்தல் சீர்திருத்தங்கள் அவசியம் என்பதைவிட மாகாண, உள்ளூராட்சித் தேர்தல்கள் அவசியம்

## மஹிந்த தேசப்பிரிய சுட்டிக்காட்டு



அரசாங்கத்தின் உத்தேசதேர்தல் சீர்திருத்தங்களை வரவேற்றுள்ள முன்னாள் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய எனினும் முன்னர் கைவிடப்பட்டுள்ள தேர்தல்களை நடத்தவேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

தேர்தல் சட்டங்களில் பாரிய மாற்றங்களை மேற்கொள்வதற்கு ஜனாதிபதி ஒன்பது பேர் கொண்ட குழுவை நியமித்துள்ளமை குறித்து கருத்து தெரிவித்துள்ள மஹிந்த தேசப்பிரிய, ஆறு மாதங்களில்தனக்குவழங்கப்பட்டுள்ள பணியை ஆணைக்குழு பூர்த்தி செய்வது மிகவும் கடினம், பல மணித்தியாலங்கள் பல நாள்கள் தொடர்ச்சியாகக்கலந்துரையாடல்களில் ஈடுபடவேண்டியிருக்கும் ஒருவருட காலத்திற்கு கூட இது நீடிக்கலாம் எனத் தெரிவித்துள்ளார்.

சீர்திருத்தங்கள் வரவேற்கத்தக்கவை. அவை இந்தக்காலத்தின் தேவை. எனினும்இவற்றிற்குமுன்னர் எங்களுக்குகாணாமல்போனமாகாண சபை தேர்தலும் புதைக்கப்பட்ட உள்ளூராட்சி சபை தேர்தலும் அவசியம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

(05)


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.10.2023இல் வெளியிடப்பெற்றது.